278

தொழில்

INDUSTRY

ஆசிரியர்: K. பெருமாள் உடையார்.

சிமிண்ட்

ஏ. ஸி. ஸி.-சார்மினர் பிராண்ட்

கீழ்க்கண்ட எங்கள் டிப்போக்களில்
ரெடி ஸ்டாக்குகள் உள்ளன.

- 15, செம்புதாஸ் தெரு, சென்னை-1.
- தி சிமிண்ட் கான்கிரிட் ஒர்க்ஸ், 11-A, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை.
- 283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை.
- 131, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.
- 14, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை.
- "ஜெயா மான்ஷன்ஸ்" பூந்தமல்லி ஹைரோடு, சென்னை.
- 139/2, புரசைவாக்கம் ஹைரோடு, சென்னை.
- 40, காளத்தியப்ப முதலி தெரு, சென்னை.
- 139, சூளை ஹைரோடு, சென்னை.
- 105, திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை.
- 3/95, பிராட்வே, (பிராட்வே டாக்கீஸுக்கு அடுத்தது) சென்னை.



N. B. உங்கள் தேவைகளுக்கு வேலை நடக்கும் இடங்களிலேயே டெலிவரி ஏற்பாடும் செய்யப்படும்.

M. குப்புசாமி நாயக்கர்

இறக்குமதி & ஏற்றுமதியாளர்கள்

15, செம்புதாஸ் தெரு.

சென்னை-1.

தபால் பெட்டி நெ. 1893
போன்: 21368 & 21369

ஸ்டாக்கிஸ்டுகள்: டாடா / S & L ஜி. ஐ. பைப்புகள்: எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமிண்ட் ரூபிங் (கூரைகளுக்கான) ஷீட்டுகள் & A. C. பைப்புகள் & பிட்டிங்குகள் முதலியன.

20 JUN 1959
MADRAS

தொழில்

இந்த இதழில்

15—7—59

வாழ்த்துகிறோம் ... 3

நகராட்சி நலம்பெற்று விளங்க ... 5

மண்பாண்ட தொழிலுக்குக் காலனி ... 6

கனவு பலிக்குமா! ... 12

சுமதியின் சபதம் ... 17

வானவில்லாக வாழ்வில் வந்தவள் ... 27

வரதட்சணையின் கொடுமை ... 33

நடிகை நந்தினி ... 41

தமிழ்நாட்டின் சிறுதொழில் வளம் ... 46

கலைமணம் (சினிமா விமர்சனம்) உட்பட ... 57

பொடிகளில் சிறந்தது எது?

கிரிஜா நெ. 1. பட்டணம் பொடி

நேதாஜி நெ. 1. பட்டணம் பொடி

சவரன் மார்க் பவுன் கலர் பொடி

ஸ்ரீ ஆண்டாள் ஆபீஸர்

ஸ்பெஷல் நெய் பொடியும் எமது தயாரிப்பே.

ராதா
பவுன்கலர் & ஆபீஸர்
பொடி

RADHA SNUFF

MANUFACTURERS: RADHA & CO., 12.T.H. ROAD. MADRAS-21.

Telegrams : MARIGOLD Phone : 31738

K. PERUMAL UDAYAR

Importer, Exporter &
Manufacturers' Representative

Iron and Steel Approved Fabricator
and Approved Scrap dealer

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்,

55, எடப்பாளையம் தெரு,

சென்னை-3.

" அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே !"

தொழில்

ஆசிரியர் ; கே. பெருமாள் உடையார்

தொழில் 2	சென்னை, 15—7—'59	இதழ் 6

வாழ்த்துகிறோம் !

சாதாரண ஊழியராக இருந்த ஸ்ரீ. காமராஜ் இன்று அரசியல் உலகத்திலே, ஒருதனி சிறப்பைப் பெற்றுள்ளார். சிக்கலான அரசியல் பிரச்னைகளை சுமுகமாக தீர்த்து வைக்கும் தீரர். அஞ்சா நெஞ்சம்படைத்தவர். ஆற்றல் திறமை நிறையப்படைத்தவர். அவரைப்பற்றிக் கூற வேண்டுமென்றால் "வார்த்தைகள் சில, செய்கைகள்பல" என்றுதான் கூறவேண்டும்.

விருதுநகரில் ஒரு சாதாரண ஏழை குடும்பத்தில் தான், ஸ்ரீ. காமராஜ், பிறந்தவர். சுயமுயற்சியில் முன்னுக்குவந்தவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்து அவர் செய்த பணிகள் பல. சென்னை ராஜ்ய முதல் மந்திரியாக மற்றைய முன்னாள் முதல் மந்திரிகளை விட அதிககாலம் இருப்பவர் ஸ்ரீ. காமராஜ் என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ. காமராஜ் அவர்கள் சாதாரண ஏழைகளிடமும், தொழிலாளர்களிடமும், அதிகத்தொடர்புகொண்டிருப்பதினாலும், குறிப்பாக காங்கிரஸ் ஊழியர்களிடம் அதிகத்தொடர்பு கொண்டிருப்பதினாலும் அன்றாடம் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களை நன்கு அறிந்து அதற்குத் தகுந்தவாறு, ஏழைகளுடையக் கஷ்டங்களை போக்கும்

208367

வாழ்க! காமராஜ்.



அளவுக்கு நிர்வாகத்தை நடத்துவதினாலும், அவருக்கு நல்ல சிறப்பு இருக்கிறது. காங்கிரஸ் ஊழியர்களிடம் நல்ல தொடர்பு கொண்டு, அவர்கள் மத்தியிலுள்ள சோர்வு, குறைவுகளை அகற்ற அவர் ஒருக்காலும் தயங்கியது கிடையாது. சாதாரண கிராமங்களுக்கு குறிப்பாக, ஏழைகள் வாழும், குக்கிராமங்களுக்கு, அவர் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்து, அங்குள்ள நிலையை சண்கூடாகப்பார்க்கிறதினால், நிர்வாகத்தை பொறுப்பேற்று, நல்லமுறையில் நடத்துவதற்கு அவருக்கு ஒரு நல்வாய்ப்பு கிடைத்துள்ளது; சிறு தொழில் வளர்ச்சிக்கு அவர் செய்கிற உதவியை நாம் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அரும்பெரும் தலைவர்களின் புகழுரையை நிறையப்பெற்ற ஸ்ரீ. காமராஜ் சாதாரண வாழ்க்கைதான் வாழ்கிறார், ஆடம்பரவாழ்க்கையை வெறுத்தவர். அவர் பிறந்தநாள் ஜூலை 15ந் தேதியாகும். தமிழ் நாட்டுத்தலைவர்களுள் ஒருவராகிய ஸ்ரீ. காமராஜரின் பிறந்த நாளாகிய ஜூலை 15ந்தேதி உண்மையிலே ஒரு புனித

m41,N56 T0

நாளாகும்; தமிழர்களுக்கு மகிழ்ச்சி கொடுக்கும் நாளாகும் அவர் வாழ்க! அவர் பணி என்றும் நமக்கு உண்டு. அவர் நெடுநாள் வாழவேண்டுமென்றும், அவர் பணி நமக்கு என்றும் கிடைக்கவேண்டுமென்றும்கோருகிறேம்.

நகராட்சி நலம் பெற்று விளங்க......

சென்னை நகராட்சி ஆணையர் பதவி தற்போது காலி விழுந்துள்ளது. செய்தித்தாள்கள் இப்பதவிக்கு யார் வருவார் என்று தம்மிச்சைப்படி ஏற்கனவே ஜோசியம் கூறப்புறப் பட்டுவிட்டன. அக்கரையுள்ள சிலர் செய்தித்தாள்களின் துணையுடன் தமக்குப் பிடித்தமானவரை நகராட்சி ஆணையர் பதவியில் அமர்த்த ஆசைப்படுகின்றனர்! ஆனல் அரசாங் கம் இவ்வதந்திகளை எல்லாம் பொருட்படுத்த மாட்டாது என்பது எம் நம்பிக்கை; பொருட்படுத்தக்கூடாது என்பதே எம் வேண்டுகோளும்கூட.

சென்னை நகராட்சியில் தற்போது ஒரு புதிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நகர ஆணையர் திறமையுள்ளவராக வும் முற்றிலும் நடுநிலையானவராகவும் அனுபவம் மிக்கவராக வும் நகர் நலனில் மட்டுமே நாட்டுடையவராகவும் இருத்தல் இன்றியமையாதது. கட்சி அரசியலில் அவர் இம்மியும் கலந்துகொள்பவராக இருத்தலாகாது. இக்கருத்துக் களை அனைவரும் ஒப்புக்கொள்வர்; நகர் நலனில் அக்கறையுள்ள அரசாங்கமும் ஒப்புக்கொள்ளும்.

நாம் மேற்சொன்ன பண்புகள் அனைத்தும்கொண்ட உயர் அதிகாரிகள் சிலர் சென்னை அரசாங்கத்தில் இருக்கின் றனர். அவர்கள் யார் யார் என்பது அரசாங்கத்துக்கும் தெரியும், பொதுமக்களுக்கும் தெரியும், அரசினர் நன்கு சீர்தூக்கி ஆய்ந்து அவர்களிடம் தகுதிவாய்ந்த ஒரு அதிகாரி யைத் தெரிந்தெடுத்து நகராட்சி ஆணையராக நியமிக்க வேண்டுமென்பதே நம் விருப்பம். சாலம் தாழ்ந்தாலும் பரவாயில்லை; நியமனம் சிறப்புடையதாக இருக்கவேண்டும். இந்நியமனம் குறித்து மாநில மந்திரிசபையின் பொறுப்பு மகத்தானது என்பதை நாம் வலியுறுத்தவேண்டியதில்லை.

தொழில் மந்திரியிடம் ஸ்ரீ K. பெருமாள் உடையார் தூது

சென்னை ராஜ்ய மண்பாண்ட உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவரும், "தொழில்" ஆசிரியருமான ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்கள் தொழில் மந்திரி ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் அவர்களைப் பேட்டி கண்டு ஒரு மகஜரை சமர்ப்பித்தார்.

இந்தியாவின் பூர்வீகத் தொழில்களில் மண்பாண்டத் தொழிலும் ஒன்று என்றும், இத்தொழிலுக்கு இங்கு சரிவர ஊக்கமளிக்கப் படவில்லை என்றும், தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பது மிகவும் அவசியமென்றும், கார்ப்பரேஷனும், மற்றைய நகரசபைகளும் இத் தொழில் செய்பவர்களுக்கு லைசென்ஸ் வழங்காததால் தொழிலில் மந்தம் ஏற்டுகிறதென்றும், ஆகையால் தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுகிறதென்றும் அவர் மகஜரில் குறிப்பிட்டிருந்தார்.

ஸ்ரீ. பெருமாள் உடையார், மேலும் குறிப்பிட்டதாவது.

மண்பாண்ட தொழிலுக்கு சர்க்கார் ஊக்கமளிக்கத் தவறியதோடு, அது, அத்தொழிலை புறக்கணிக்கவும் செய்து விட்டது. பொதுமக்களுக்கு, இத் தொழிலால் இடையூறுகள் இருக்கின்றன என்று கூறி லைசென்ஸ் வழங்க மறுக்கப்படுகிறது. தொழிலுக்கு வேண்டிய களிமண்ணும், மூலப்பொருள்களும் அவ்வப்போது இடைக்காததால் தொழிலை நம்பி வாழ்பவர்கள் அதிக அளவு கஷ்டப்படுகிறார்கள் என்றும் கூறப்பட்டது.

சென்னை ராஜ்யம் முழுவதும் சென்னையிலும், ஜில்லாத் தலைநகர்களிலும் மற்றைய இடங்களிலும், மண்பாண்டத் தொழிலாளர்களுக்குக் காலனிகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டியது மிக, மிக அவசியமென்றும், சிறுதொழில்களை ஊக்குவிக்க மத்திய சர்க்கார் ஒதுக்கியுள்ள நிதியில் சிறிதளவு இந்த மண்பாண்டத் தொழிலுக்கு ஒதுக்கவேண்டுமென்றும், சூளை போடுவதற்கான வசதிகள், மண்பாண்ட உற்பத்தியாளர்களுக்கு வழங்கப் படவேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது.

மண்பாண்டத் தொழில் பொதுமக்களுக்கு இடையூறு என்று கூறி, மண்பாண்டத் தொழிலாளர்களின் மேல் வழக்குகள் போட்டு, அவர்களுக்கு அபராதமும் விதிப்பது வருந்தத்தக்கது; கண்டிக்கத் தக்கதும் கூட என்றும், மகஜ.

குடுமியா? கிருப்பா?

டாக்டர் பி.எஸ். சின்னசாமி
பி.எஸ்.ஸி. எம்.பி.பி.எஸ்

டாக்டர் பி.எஸ். சின்னசாமி வைத்தியத் துறையில் நல்ல புகழடைந்தவர். ஏழைகளிடம் அன்பும் கருணையும் கொண்டவர். "குடுமியா, கிருப்பா?" என்ற அவருடைய சுவையுள்ள கட்டுரை நமது பத்திரிகையில் அடுத்த இதழில் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். —ஆசிரியர்.

ரில் கூறப்பட்டிருந்தது. பூர்வீகத்தொழிலான இம்மண்பாண்டத் தொழிலை சர்க்கார் கவனித்து, மண்பாண்ட உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளை அகற்றி ஆவன செய்யவேண்டுமென்றும் கூறப்பட்டிருந்தது. தொழில் மந்திரி, ஸ்ரீ. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் ஆவன செய்வதாக வாக்குறுதி கொடுத்ததை தொழில் பாராட்டுகிறது.

—●—

காகிதம் உபயோகிப்பாளர்களுக்கு

அரசாங்க வர்த்தகக் கார்ப்பரேஷன், ஆர்ட் காகிதம், ஆர்ட் குரோம், அச்சுவேலைக்கான வெள்ளைக்காகிதம், வெள்ளைத் தாள்கள், பகர்ப்பு வேலைக்கான மானிபோல்டிங் பேப்பர், வெள்ளை எம். ஜி. டிஷ்யூ பேப்பர் காகித ரகங்களை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்து வருகிறது. ஷெட்யூல்ட் தொழில்களிலும், அவையல்லாத வேறு வகைப்பட்ட தொழில்களிலும், இப்பொருள்களை உபயோகிப்பவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவை இறக்குமதி செய்யப்படுகின்றன.

இப்பொருள்களை உபயோகிப்பவர்கள், மத்திய வர்த்தக தொழிலியல் மந்திராலயத்தின் அபிவிருத்திப் பிரிவிலிருந்தோ அல்லது ராஜ்ய தொழில்துறை டைரெக்டர் காரியாலயங்களிடமிருந்தோ அத்தியாவசிய உபயோக அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இறக்குமதி செய்யப்பட வேண்டிய காகித ரகத்தின் முழு விவரங்களையும், அவற்றைக்கொண்டு இறுதியாகத் தயாரித்தனுப்பப்படும் தயாரிப்புப் பொருள்களின் விவரங்களையும் எழுதி அனுப்ப வேண்டும்.

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்

சென்னை அரசினர் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்துக்கு, டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனை ஒரு உறுப்பினராக நியமித்து அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

—※—

சஞ்சிகைகளுக்குப் புதிய தபால் கட்டண விகிதம்?

இந்திய சர்க்கார், இந்தியத் தபாலாபீஸ் சட்டத்தில் பத்திரிகை என்ற பதத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அர்த்த விளக்கத்தின் கீழ் தற்போது மாத சஞ்சிகைகளுக்குத் தபால் கட்டண விஷயத்தில் ஓரளவு சலுகை காட்டுவது பற்றி ஆராய்ந்துள்ளனர்.

தற்போதைய அர்த்த விளக்கத்திலடங்காத சஞ்சிகைகளை இனி பின்கண்ட விசேஷ சலுகைக் கட்டணப்படி புஸ்தகப் பாக்கெட்டுகளாக அனுப்ப அனுமதிக்கத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அதாவது 1 முதல் 10 தோலா அல்லது அதன் பகுதிக்கு 8 நயேபைசே அதற்கு அதிகமாயுள்ள ஒவ்வோரு ஐந்து தோலாவுக்கும் அதன் பகுதிக்கும் 3 நயே பைசே சலுகைக் கட்டணப்படி அவைகளை அனுப்பலாம். ஆனால், அந்த சஞ்சிகைகள் பத்திரிகைப் பதிவு அதிகாரிடம் (ரிஜிஸ்தரார் ஆப் நியூஸ் பேப்பேர்ஸ்) பதிவு செய்யப் பட்டு, அந்தப் பதிவு எண் அந்த சஞ்சிகையில் முதல் பக்கத்திலோ அல்லது கடைசிப் பக்கத்திலோ சௌகரியமான ஓரிடத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கவேண்டும். இந்தச் சலுகை 1939 ஜூலை 1 தேதி முதல் அமுலுக்கு வரும்.

அறிவிப்பு

சென்னை ராஜ்ய இரும்பு எஃகு பேப்ரிகேட்டர்கள் சங்கத்தின் ஏழாவது மகாநாட்டு நடவடிக்கைகள் அடுத்த இதழில் வெளியிடப்படுமென்பதைதெரிவித்துக் கொள்கிறோம்.-ஆசிரியர்.

———

126 சேரி ஒழிப்புத் திட்டங்களுக்கு அங்கீகாரம்

1956 சேரி ஒழிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திலிருந்து 1959 மே மாதம் கடைசி வரையில் யூனியன் மராமத்து-ஜாகை வசதி சப்ளை மந்திராலயம் மொத்தம் 126 சேரி ஒழிப்புத் திட்டங்களுக்குஅங்கீகாரம் அளித்திருக்கிறது.

இத்திட்டங்களில் மொத்தம் 19,598 வீடுகளைக் கட்டுவதற்கும், 11,731 அபிவிருத்தி செய்யப்பட்ட மனையிடங்களை ஏற்படுத்துவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இத்திட்டங்கள் முழுவதுக்கும் மொத்தம் 953.42 லட்சம் ரூபாய் செலவாகும். இவ்வருஷம் மார்ச் மாதக் கடைசிவரையில் 1,158 வீடுகள் கட்டிமுடிக்கப் பட்டன; 1,484 மனையிடங்கள் சப்ளை செய்யப் பட்டன; மேலும் 4,818 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன; 602 மனையிடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களை நிறைவேற்றிவைப்பதற்காக ராஜ்ய சர்க்கார்களுக்கு 1959 மார்ச் கடைசி வரையில் 219.11 லட்சம் ரூபாய் வினியோகிக்கப்பட்டிருக்கிறது.

நகரங்களில் நில விலை அதிகமாயிருப்பதால், அங்கேயுள்ள சேரி ஒழிப்புத் திட்டங்களுக்கு மத்திய சகாயத்தொகை அதிக அளவில் கிடைக்கும். அதாவது $37\frac{1}{2}$% (25%-க்குப் பதிலாக)

அப்ரகத்தின் சிறப்பு

அப்ரகக் கமிட்டியின் மின் சாரத்துறை உபயோகத்துக் கேற்ற தன்மைகளைப் பரி சோதித்துப் பார்த்து மதிப் பீடு செய்வதற்கான கருவி ஒன்றை கல்கத்தாவிலுள்ள மத்திய கண்ணுடி—மண் பாண்ட ஆராய்ச்சி நிலையம் உருவாக்கியிருக்கிறது. மின் சாரத் தொழில் அப்ரகமாவது பல்வேறு வகையான காரியங் களுக்கு உபயோகப்படுத்தப் படுகிறது. ஆனல் எல்லாவகை யான அப்ரகங்களையும் மின் சார சாமான்களின் தயாரிப் புக்குப் பயன்படுத்திவிட முடி யாது. புதிதாகக் கண்டுபிடிக் கப் பட்டுள்ள இக்கருவியின் மூலம், அப்ரகத்தை அதன் மின்சாரப் பண்புகளின் அடிப்படையில் மிக துரித மாகவும் பிசகில்லாமலும் அவைகளை பிரித்துவிட முடி யும்.இதன் உதவியைக் கொ ண்டு மின்சாரத்துறை உப யோகத்துக்கேற்ற மிகச் சிற ந்தசுத்தமான அப்ரகத்தைத் தெரிந்தெடுப்பது சாத்தியமாகி விட்டிருக்கிறது; அதோடுகூட புள்ளி விழுந்த கறை படிந்த அப்ரகங்களிலும் உபயோகத் துக்கு லாயக்கானவைகளைக் கண்டுபிடித்து உபயோகிக்க முடிகிறது. வேறு முறைகளை அனுசரித்தால் அவை உதவாதென்று தள்ளிவிடப் படும். பேலும், மின்சார காரி யங்களுக்குக் குற்றமற்ற அப்ர கம் மாத்திரமே உபயோக மாகும்படியும் பார்த்துக் கொள்ளலாம்.

இந்த சாதனம் பாட்டரி விசையைக் கொண்டு இயங்கு கிறது. கையில் எடுத்துச் செல்வதற்கு வசதியான முறையில் இதன் உருவ அமைப்பு அமைந்திருக்கிறது. இதை இயக்குவது மிகவும் சுலபம். இதைக் கொண்டு எல்லா ரக அப்ரகங்களையும் மிகத் துரிதமாக வகை பிரித்து விடமுடியும்:

———

சிமிட்டிப் பற்ருக்குறை?

சிமிட்டியின் சப்ளை நிலை மையில் ஏதாவது பற்ருக் குறை காணப்பட்டால், அது பற்றி சம்பந்தப்பட்ட ராஜ்ய சர்க்கார்களுக்கும், சிமிட்டி வினியோகத்தைக் கொண்டு வருகிற அரசாங்க வர்த்தகக் கார்ப்பொரேஷனுக்கும் அறி விக்கும்படி சிமிட்டி உபயோ கிப்பாளர்களுக்கு இந்திய சர்க்கார் ஆலோசனை கூறி யிருக்கிருர்கள்.

ஆனல், நாட்டில் சிமிட்டிப் பற்ருக்குறை எதுவும் கிடை யாது; உற்பத்தி சக்தியானது தேவையை விட மிக அதிக மாக இருந்து வருகிறது.

உங்களுக்குத் தெரியுமா?



அமெரிக்காவில் "ரைட்" சகோதரர்கள் முதல் முதலில் 1903ம் ஆண்டு ஆகாய விமானம் பறக்கவிட்டார்கள். அப்போது ஆகாயத்தில் அவ்விமானம் 120 அடி தூரம்தான் பறந்தது; தற்போதைய விமானம், ஒரு இடத்திலும் நிற்காமல் 10,000 மைல்கள் வரை பறக்கிறது.

சந்திரனின் ஒளியை அளக்க முடியுமா? உங்கள் முன் ஒரடி தூரத்தில் ஒரு மெழுகு வர்த்தியைப் பிடியுங்கள்; சந்திரன் ஒளியைப் போல், நீங்கள் பிடித்திருக்கும் மெழுகு வர்த்தியின் ஒளி, 4 மடங்காகும் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிருர்கள்.

உணவில்லாமல் மனிதன், 30 லிருந்து 40 நாட்கள் வரை உயிர்வாழ முடியும்; ஆனல் தண்ணீரில்லாமல் 3 லிருந்து 5 நாட்கள்கூட வாழ முடியாது என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளார்கள்.

மனிதனின் வாழ்நாள் உலக அடிப்படையில் 52 ஆண்டுகள்தான்; ஒரு மனிதனின் சராசரி எடை 132 ராத்தல். உயரம் 5 அடி 4 அங்குலம்; பெண்கள் சிறுது குள்ளமாக இருக்கிருர்கள்; இது உலக கணிப்பு!



ஒரு பீரங்கி தயார் செய்வதற்கு எவ்வளவு இரும்பு, எஃகு தேவைப்படும்? கிட்டத்தட்ட, 100 விவசாய டிராக்டர்கள் செய்ய தேவைபடும் இரும்பும், எஃகும் ஒரு பீரங்கி செய்ய தேவைபடுகிறதாம்.



தற்போது ஆகாயத்தில் பறக்கும், விமானத்தின் இறக்கை எவ்வளவு எடையின் அமுக்கத்தை தாங்கும்? கிட்டத்தட்ட விமான இறக்கையின் ஒரு சதுர அங்குலஇடம் 18 டன்எடையைத்தாங்கமுடியும்; அதாவது 4 யானைகளின்எடையை அது தாங்கமுடியுமாம்!

உலகத்தில் அவதரித்த சர்வாதிகாரிகள் ஒருவரும் தங்கள் குறிக்கோளை அடைய முடியவில்லை என்பதை வரலாறு நமக்கு எடுத்து காட்டுகிறது; ஹிட்லர், முஸோலோனி போன்றவர்கள் இதற்கு உதாரணமாவர்ர்கள்; உரிமைக்காகப் போராடு, வெற்றி காண்! என்பதை மக்கள் தெரிந்துகொண்டு இயங்கவேண்டும்.

ஒரு மனிதனுக்கு, 3 ஏக்கர் நிலத்தில் விளையும் விளைச்சல் போதுமானது; உலக சராசரிபடி ஒரு மனிதனுக்கு ஒரு ஏக்கர் நிலம்தான்; அப்படி இருந்தபோதிலும், உலகத்திலுள்ள நிலங்களில் 1/10 பாகம் தான் சாகுபடி செய்யப்படுகிறது. 9/10 பாகம் தர்சாகக் கிடக்கிறது.

கனவு பலிக்குமா!

—[ராஜலட்சுமி ராஜாராம்]—

சர்க்காரில் உயர்தர உத்தியோகஸ்தர் நாராயணனின் ஏக புதல்வி கீதாவை மிக செல்வமாக வளர்த்தார். அவள் ஒரு பேரழகியானாள். அவளுக்கு வரன் தேடும் படலத்தில் ஈடுபடுகிறார் நாராயணன்... தனக்கேற்ற வரன் சுலபமாக கிடைப்பதாகத் தெரியவில்லை. ஒரு ஜோசியரை அணுகுகிறார்... ஜோசியரின் ஆலோசனையின்படி மகளை அனுமார் கோயிலை தினம் வலம் வர அனுப்பி வைக்கிறார்... கோயிலுக்கு போகும் வழியிலேயே... அநுசரிக்கிறார்அநுமார்... கோபுவின் சைகிள் மோதலின் விளைவாக... கனவு பலிக்குமா... பலிக்காதா...!

வெற்றிலை பாக்கு கடைக்காரனிடம் எட்டணா சில்லறையைக் கொடுத்து, பழம், புஷ்பம், சூடம் முதலான அர்ச்சனைக்கான சாமான்களை வாங்கிக் கொண்டு அனுமார் கோவிலினுள் நுழைந்தாள் கீதா. அவள் கண்கள் நாலாப் பக்கமும் கலங்கரை விளக்குபோல் சுழன்றன. யாரையோ மிகுந்த ஆவலுடன் எதிர் பார்த்தாள். அவன் சற்று தூரத்தில் வருவதைக் கண்ட பிறகுதான் அவளுக்கு நிம்மதி ஏற்பட்டது. அவன் அருகில் வந்ததும், அப்பாடா எங்கே வராமலிருந்து விடுவீர்களோ என்று பயந்தே விட்டேன். தங்களைக் கண்ட பிறகுதான் மூச்சு வந்தது என்றாள் விளையாட்டாக. அவள் முகம் சூரியனைக் கண்ட தாமரையைபோல் மலர்ந்தது.

என் கீதாவைப் பார்க்க எங்கிருந்தாலும் என்ன இடையூறு நேர்ந்தாலும் லக்ஷ்யம் செய்யாமல் ராக்கெட்டிலேயாவது ஏறி வந்து குதித்துவிட மாட்டேனா என்றான், கோபு.

சரி, சரி, நம் பேரிலேயே எல்லோருடைய கண்களும் கண்ணி வைக்கின்றன. உள்ளே போகலாம் வாருங்கள் என்று சொல்லியவாறு முன்னே நடந்தாள், அந்தமின்னலிடையாள்.

அந்த அன்ன நடையாளின் பின்னழகைப் பார்த்து ரசித்தவாறு பின் தொடர்ந்தான் கோபு. தந்தத்தில் வார்த்தெடுத்தது போன்ற உடலமைப்பு. தாமரை மலர் போன்ற மதி வதனம். கருவண்டையொத்த கண்கள், முத்துப்பல் தெரிய கீதாவின் மோகனச் சிரிப்பில் தன் மனதையே அவளிடம் பறிகொடுத்து திரும்ப வாங்கத் தெரியாமல் தவித்தான் கோபு. அர்ச்சனை முடிந்து திபாராதனைத் தட்டை அவர்களிடம் கொடுத்து அர்ச்சகர் இருவரையும் ஆசீர்வதித்தார் தம்பதி என்ற எண்ணத்தில்.

கீதாவின் முகத்தை நோக்கி ஞன் கோபு. வெட்கம் கன்னங்களை செம்பிழம்பாக்க தலையைத் தாழ்த்திக் கொண்டாள் கீதா. இருவரும் தங்களுக்குத் தேவையான வரங்களை சக்திவாய்ந்த அனுமாரிடம் வேண்டிக்கொண்டு சற்று தூரத்திலுள்ள பூங்காவில், வண்ண ஜர்லங்களை மின் விளக்கின் ஒளியில் அள்ளி வீசும் நீர் ஊற்றின் அருகே புல் மெத்தையில் அமர்ந்தது தான் தெரியும். நேரம்போவதே தெரியாமல் அன்றும் பேசினர்கள். இன்றும் பேசுகிருர்கள் இனியும் பேசுவார்கள்.

அடாடா...ரொம்பநேரமாகி விட்டதே, ஆபீஸிலிருந்து அப்பாகூட திரும்பி இருப்பார். கோவிலுக்குப் போய்வர இவ்வளவு நேரமா? என்று அம்மா வேறு திட்டுவாளே, என்ற பயத்துடன் கூறிக்கொண்டே அவசர அவசரமாக கோபுவிடம் பிரியா விடை பெற்று வீட்டை நோக்கி நடந்தாள்.

என்னம்மா கீதா இன்று ஏன் இவ்வளவு தாமதம்? ரோடில் பஸ்களும், கார்களும் இரிக்கெட் விளையாடி தினம் விபத்து மயமாய் இருக்கிறது: பேபி ஆஸ்டினையாவது எடுத்துப்போய் பார்த்து வரச் சொல்லலாம் என்று பார்த்தால் டிரைவர் கந்தசாமியும் அப்பாவோடு போய்விட்டான். நான் ரொம்பவும் கவலைப்பட்டு போய்விட்டேனே. சீக்கிரம் வரக்கூடாதா? என்ருள் வாசலிலே அவள் வரவை எதிர் பார்த்து கொண்டிருந்த தர்யார் கோமதி.

இல்லையம்மா, வரும்வழியில் என் சிநேகிதி பவானியைப் பார்த்தேன். பேசிக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை அதனுல் சற்று லேட்டாகிவிட்டது. ஆமாம் அப்பா வந்துவிட்டாரோ? ஆபீஸிலிருந்து என்ருள் குழைவான குரலில். இல்லை, என்னவோ இன்று அவரும் வரக் காணும் அப்பா, பெண் இருவருக்கும்தான் யாராவது அகப்பட்டுவிட்டால் வீட்டு நினைவு கூட இருக்காதே எனக்கு அக் ஞானம் கேழ்க்கவில்லை, பைத்தியம் மாதிரி உள்ளிற்கும் வாசலுக்கும் அலைந்து கவலைப் பட்டுக்கொண்டு கிடக்கிறேன், என்று சொல்லிக்கொண்டே உள்ளே போய்விட்டாள். நல்ல வேளை அப்பா வரவில்லையோ பிழைத்தேன். அவர் கேட்கும் கேள்விகளுக்கு பதில்சொல்லி தப்பமுடியாதே என்று நினைத்துக்கொண்டே தன் அறைக்குள் சென்ருள் கீதா. உடையை மாற்றிக்கொண்டதும் சோபாவில் உட்கார்ந்து ஏதோ ஒரு நாவலை எடுத்லு ஏடுகளை புரட்டினுள். அவள் மனக்கண்ணின் முன்னுல் கோபுவின் களை பொருந்திய அழகியமுகம் தோன்றியது. மெல்ல தனுக்குள் சிரித்து புஸ்தகத்தை மூடி மேஜையின் மேல் போட்டாள். அவள் மனம் கோபுவை சந்தித்த அந்த நாளை எண்ணிப் பார்க்க ஆரம்பித்தது.

நாராயணனின் ஏக புத்திரி கீதா. சர்க்கார் காரியாலயத்தில் மிக உயர்ந்த பதவியில் இருந்தார். நிறைய சம்பாத்யம். கிராமத்தில் நிறைய நில புலன்

களும், மர்ம்பலத்தில் இரண்டு பங்களாக்களும் இருந்தன. ஒரே பெண்ணான கீதாவிடம் நாராயணனும் கோமதியும் தன் உயிரையேவைத்திருந்தார்கள். கீதாவை மிகவும் செல்லமாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகவளர்த்து வந்தார்கள். நாராயணன் எவ்வளவு அன்பாக இருந்தாரோ அவ்வளவு கண்டிப்பாகவுமிருப்பார். கோபமாயிருக்கும் சமயத்தில் அவருடன் பேச கீதா உள்பட யாவருக்கும் நடுக்கம். கீதா பருவவயதையடைந்தாள். பட்டப்படிப்பும் முடிந்தது. நாராயணன்வரன் வேட்டை ஆடினார், ஆடினார் ஆடிக்கொண்டேயிருந்தார். கணக்கற்ற ஜாதகங்கள் வந்து குவிந்தன. அவரிடம் சம்பந்தம் செய்துகொள்ள எவ்வளவோ பேர்கள் ஆசைப்பட்டார்கள் பெண்ணுடன் பொன்னும் பொருளும் வருவதிலும் யாருக்குத்தான் கசக்கும்? தங்கள் அந்தஸ்துக்கேற்ற பணக்காரனாயும், நிறைய படித்தவனாயும், கீதாவிற்கேற்ற அழகனாயும் இருக்கவேண்டுமென்று பெரிதும் விரும்பினார். ஒன்று சரியாயிருந்தால் மற்றொன்று சரியில்லை. எல்லாம் பொருந்தினால் பையன் குள்ளமாயும் கருப்பாயுமிருப்பான். இப்படியே இரண்டு வருடம் கழிந்தது. எல்லாமிருந்தும் தன் பெண்ணிற்கு கல்யாணம் நடக்காமல் தட்டிப்போவதால் பிரபல ஜாதகரிடம் ஜாதகத்தைக் காண்பித்தார். அவர் ஜாதகத்தில் ஏதோ தோஷமிருப்பதால்தான் கல்யாணம் தட்டிக்கொண்டே வருவதாயும் ஒரு மண்டலம் அனுமாருக்கு தினம் தீபம் போட்டு உங்கள் பெண்ணைப் போய் அர்ச்சனை பண்ணிவரச் சொன்னால் தோஷம் நிவர்த்தியாகி சீக்கிரத்தில் மனதிற்கேற்ற மணவாளனுடன் மணமாகும் என்று சொன்னார். அதன் விளைவுதான் கீதா தினம் அனுமார் கோவிலுக்குப்போக ஆரம்பித்தாள். கீதாவிற்கு இதிலெல்லாம் அவ்வளவு நம்பிக்கையில்லை. வேண்டா வெறுப்பாக போக ஆரம்பித்தாள். அவள் வாழ்க்கைப் பூங்காவில் வந்து குதித்த கோபு அவளை அனுமார் கோவிலுக்கு விரும்பி வரும்படி செய்து விட்டான்.

வழக்கம்போல் கோவிலுக்குப் போய்க்கொண்டிருந்த கீதா ஏதோ யோசித்தபடி தன்னை மறந்து சென்று கொண்டிருந்தாள், ஒரு சைக்கிள் வந்து அவள் மீது லேசாக மோதி முத்த மிட்டது. அந்த அதிர்ச்சியில் கையிலிருந்த பூஜைத் தட்டு கீழே விழுந்தது...தன் நிலையடைந்த கீதா ஆத்திரத்துடன் திரும்பினாள்.

எக்ஸ்யூஸ் மி, கூட்ட நெருக்கடியில் தங்கள் மேல் தவறுதலாக மோதி விட்டேன். கோபித்துக் கொள்ளாதீர்கள் என்று கெஞ்சிய ஆணழகனைக் கண்டவுடன் கீதாவின் கோபம் ஸ்புட்னிக்கில் பறந்தது...பரவாயில்லை என்று சொல்லியபடி கீழே கிடந்த பூஜா சாமான்களை எடுக்கப் போனாள். இருங்கள், நானே எடுத்துத் தருகிறேன். என்றவாறே எல்லாவற்றையும் தட்டில் பொருக்கிப் போட்டான்.

கீழே குனிந்து பூஜை சாமான்களை பொருக்கும் போது அவனை நன்ருகப் பார்த்தாள் கீதா. நல்ல உயரம் உயரத்திற்கேற்ற பருமன், உருண்டையான கனை பொருந்திய முகம், தக்களிப்பழம்போன்ற சிவந்த மேனி, சுருண்டடர்ந்த கேசம் என்று மனக் காமிராவில் ஒரு ஸ்னுப் எடுத்துக் கொண்டாள். இந்தாருங்கள் என்று தட்டை அவளிடம் நீட்டிய கோபு இவ்வளவு நேரம் அவள் தன்னையே பார்த்துக்கொண்டிருந்தாள் என்பதை அறிந்து வியப்புடன் அவளைப் பார்த்தான். அவள் அழகில் அயர்ந்துபோனுன். நீங்கள்எங்கிருக்கிறீர்கள்? என்ருன் கோபு.

கோல்மார்கெட்டில். இனி 'நீங்கள்' எல்லாம் தேவையில்லை ஒருமையிலேயே கீதா என்று அழையுங்கள், என்ருள் பதிலுக்கு.

ரொம்ப தாங்க்ஸ் என்ருன் கோபு. இப்படியாக இவர்கள் சிநேகம் முல்லைக் கொடிபோல் படர்ந்து வளர்ந்து அரும்பியது. தினம் கீதா கோவிலுக்கு வரும் நேரத்தில் தவருமல் ஆஜர் கொடுப்பான் கோபு. இருவரும் ஸ்வாமியை வலம் வந்து வணங்கிய பிறகு அருகிலுள்ள பூங்காவில் அளவளாவிப் போவது தினப்படி வேலை. இருவரும் பரஸ்பரம் தங்கள் காதலை பரிமாரிக்கொண்டார்கள்.

எப்படியும் அப்பாவிடம் சமயம் பார்த்துச் சொல்லி அவனைத் தன்னுடைய உட்மையாக்கிக்கொள்ள ஆசைப்பட்டாள். அவனைப்பற்றிய விபரங்களையும் தெரிந்துகொண்டாள்.

அவனும் அவன் அம்மாவும் தானும். தந்தை சிறு வயதிலேயே காலமாகி விட்டாராம். எம். ஏ. வரை மிகவும் கஷ்டப்பட்டு பாதி உபகாரச் சம்பளத்திலும், பாதி பிறர் உதவியிலுமாக படித்து வேலைக்கு அலைந்து கொண்டிருக்கிருரும். நூர்ஜஹான் ரோட்டில் இருப்பதாக சொன்னுன். சொத்து சுதந்திரம் ஒன்றும் கிடையாதாம். அவன் அம்மா ஒரு பெரிய உத்யோகஸ்தர் வீட்டில் சமைத்துப் போட்டு இவனை படிக்கவைத்ததாயும், இப்பொழுதும் அந்த வரும்படியில் தான் இருவரும் கஷ்டஜீவனம் செய்து வருவதாயும் கூறினுன். வேலைக்காக அவன் ஏறி இறங்காத அலுவலகமே பாக்கி இல்லையாம். ஊரிலுள்ள அத்தனை ஆபீஸ் அட்ரஸும் இவனுக்கு மனப்பாடம் ஆனது தான் மிச்சம். இன்னும் வேலை தான் கிடைக்கவில்லையாம்.

பெரிய உத்யோகத்தில் இருக்கும் தன் தந்தையிடம் சிபார்சு செய்து அவனுக்கு ஒரு நல்ல வேலை வாங்கிக்கொடுத்து விட வேண்டுமென நினைத்தாள். செல்லப் பெண்ணுன தன் ஆசையை அப்பா நிச்சயம் நிறைவேற்றி வைப்பார் என்ற நம்பிக்கையில் சோபாவிலிருந்து எழுந்த கீதா தன் தலை மயிரைக் கோதி சரி செய்துகொண்டு ஹால் ரூமிற்குள் வந்தாள். அப்பொழுது தான் நாராயணன் ஆபீஸிலிருந்து வந்து "பூட்டைக்" கழட்

டிக் கொண்டிருந்தார். வேலைக்காரன் காரிலிருந்த கார்யாலய பைல் மூட்டைகளை உள்ளே கொண்டு வந்தான்.

ஏன் அப்பா! இன்று லேட். மணி ஒன்பதரை ஆகிறதே என்று சொல்லிக்கொண்டே வந்த கீதாவை, அந்த பேன் ஸ்விட்சைப்போட்டு விட்டு இப்படி வந்து உட்காரம்மா. புழுக்கம் தாங்கமுடியவில்லை என்றார். வாஞ்சையுடன் பெண்ணின் தலைமயிரை கோதியபடி வேலை ஜாஸ்தியாக இருந்தது. வீட்டில் வந்து நிம்மதியாக முடித்துவிடலாம் என்று பைல்களை மூட்டைகட்டிக்கொண்டு ஐந்து மணிக்கே கிளம்பிவிட்டேன். வழியில் என் நண்பன் நடேசன், கல்லூரிக்கட்டிட நிதிக்காக இசைராணி இன்பலக்ஷ்மியின் சங்கீதக்கச்சேரிக்கு நச்சரித்து அழைத்து சென்றுவிட்டான். கச்சேரி படுஜோர். நீ இருந்திருந்தால் அக்கச்சேரியைக்கேட்டு மெய்மறந்து ஒன்ஸ்மோர்கூட சொல்லி இருப்பாய் என்றார்.

சாப்பிட வாருங்கள் எல்லாம் தயாராய் இருக்கிறது என்று கோமதி அழைக்க, தந்தையும் மகளும்சாப்பிடச் சென்றார்கள். சாப்பாடு ஆனதும் இருவரும் மாடிபால்கனியில் போய் காற்றுட உட்கார்ந்தனர். பொதுவான விஷயங்களைப் பற்றி சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தனர். கீதா தன் ஆசையை எப்படி அப்பாவிடம் தெரிவிப்பது என்று யோசித்தபடியே, தக்க சந்தர்ப்பம் வராதா? என்று ஏங்கினள்.

எப்படியும் இந்த வருடம் உன் கல்யாணத்தை நடத்திவிட ஆசைப்படுகிறேன். கீதா! இவ்வளவுகாலம் தேடியது வீண்போகவில்லை. சென்ற மார்ச் மாதம் பரோடா போய் சில ஐ. ஏ. எஸ். பையன்களை அங்குள்ள ட்ரெயினிங் ஸ்கூலில் பார்த்துவந்தேன் அல்லவா. பயிற்சி முடிந்து அந்தப் பையன்கள் சென்றமாதம் தான் திரும்பினர். அதில் ஒரு பையன் உனக்கேற்றவன். பிக்கல் பிடுங்கல் இடையாது. பார்ப்பதற்கு கனஜோராய் இருக்கிறன் உன்னைப்பண்ணிக் கொள்ள அவனுக்கு கசக்கவா போகிறது? என்றார்.

(தொடரும்)

இந்தியாவில் இரும்புக் கனி உற்பத்தி

1959 ஏப்ரல் மாதத்தில் மொத்தம் 5,87,000 மெட்ரிக் டன் இரும்புக் கனி வெட்டியெடுக்கப்பட்டதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

1959-ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து இதுவரை இத்துடன் மொத்தம் 24,98,000 மெட்ரிக் டன் இரும்புக் கனி வெட்டியெடுக்கப்பட்டிருக்கிறது. 1959ம் ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் இந்த அளவு 20,26,000 மெட்ரிக் டன்னுக இருந்தது.

சுமதியின் சபதம்

சி. ஜெ. மார்த்தாண்டம் பி. ஏ.

(தொடர் கதை)

ஓடிய கதை

மைலாப்பூரில் பிரபல வக்கீல் குமாரி சுமதி கண்ணப்ப முதலியாரின் ஒரே மகள். அவருடைய பிறந்த ஊர் நெல்லை ஜில்லாவிலுள்ள ஆறுமுக நேரியாகும்; ஆறுமுக நேரியில் நாயக்கர் குடும்பம் சீரும் சிறப்பும் வாய்ந்ததாகும்; நாயக்கரின் இளையவரான கோவிந்தசாமி நாயக்கருக்கு இரண்டு புதல்வர்கள்: அவர்களின் மூத்தவனான ராஜரத்தினத்தின் மேல், சுமதிக்கு சிறு வயது முதல் அளவு கடந்த பிரியம் உண்டு; ஏற்கனவே முதலியார் குடும்பத்திற்கும். நாயக்கர் குடும்பத்திற்குமிடையில் நல்ல உறவு உண்டு; தற்போது சுமதி பிரபல வக்கீலாக இருக்கிறாள்; ஊரைவிட்டு, சென்னைக்கு கண்ணப்ப முதலியார் சுமதியோடு வந்து கிட்டத்தட்ட 8 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. சுமதி, ஊரைவிட்டு சென்னைக்கு வந்தபோதிலும், அவள் ராஜரத்தினத்தின் மேல் கொண்டகாதல், வளர்ந்ததே அல்லாமல் குறையவில்லை; எதிர்பாராத விதமாக, சென்னையிலுள்ள சுமதி பங்களாவிற்கு, ராஜரத்தினம் வந்து சேர்ந்தான்; ராஜரத்தினத்தைப் பார்த்ததும், சுமதி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை; ராஜரத்தினம் குழப்பத்தோடும், கொந்தளிப்போடும், பங்களாவை விட்டு வெளியேறி விட்டான்; சுமதியின் பங்களாவில் அவன் தங்கியது 5 நாட்கள் தான். தன் தகப்பனார் கண்ணப்ப முதலியார் ராஜரத்தினத்தைக் கடிந்துரைத்ததால் தான், அவன் வெளியேறிவிட்டான், என்று தெரிந்ததும், சுமதி அடைந்த துக்கத்திற்கு அளவே இல்லை; ராஜரத்தினம் பிரிந்ததும், 8 ஆண்டுகளுக்கு முன் நடந்த வாழ்க்கை வரலாறைத் திருப்பிப்பார்த்தாள். வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒவ்வொன்றாக அவள் மனத்திரையில் வந்தது, எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்குச் சுமதி, அன்று ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தாள். அப்போது, சுமதியும் ராஜரத்தினமும் தங்கள் வருங்கால

வாழ்க்கையைப் பற்றி திட்டங்கள் தீட்டிக் கொண்டிருந்தார்கள்; திடீரென்று பாண்டியன், பீதியோடு, அவர்கள் அறைக்குள் நுழைந்தான்.

5. புயல்வீச ஆரம்பித்துவிட்டது

ராஜரத்தினமும், சுமதியும், கோவிந்தசாமி நாயக்கர் வீட்டில் படித்துகொண்டிருக்கும் போது, பாண்டியன் திடீரென்று, அறையுள் நுழைந்த போது அவன் முகத்தில் பீதியும்குழப்பமும் காணப்பட்டது.

ஆறுமுக நேரி ராஜா தெருவில் இரண்டு பங்களா ஒன்று போல்அமைக்கப்பட்டிருந்தது; ஒன்றில் கோவிந்தசாமி நாயக்கரும், மற்றதில், அவர் அண்ணன் கஜபதி நாய்க்கரும் வசித்து வந்ததாக முன்னாலேக் கூறப்பட்டது. கஜபதி நாயக்கர், சூதும்,கபடும் நிறைந்தவர். கோரமான பார்வையும், அவருடைய நீண்ட மூக்கும், மீசையும், பார்க்கவே பயங்கரமாக இருக்கும்; அவர் யாரோடும் பழகமாட்டார். ஊரில் ஏற்படக் கூடிய தகராறுகளுக்கெல்லாம் மூலகாரணம் கஜபதி நாயக்கர் தான் என்று ஊரில் பேசிக் கொள்வார்கள். கஜபதி நாயக்கர், பக்கத்தில் வேலு நின்று கொண்டு ஏதோ பேச ஆரம்பித்தான்.

"ஆமாம், உங்கத் தம்பி, கோவிந்தசாமி நாயக்கர் நேற்று நம் அரசமரத்தடியில் ஒரு கூட்டத்தில் பேசினார். ஏகப்பட்டக் கூட்டம். அவர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய நம்ம ஊர் மாஜி நீதிபதி கணபதி அவரை மிகவும் பாராட்டிப் பேசினார்," என்று வேலு, கோவிந்தசாமி நாயக்கரைத் தூக்கிப்பேசுவது போல் பேசிவிட்டு, கஜபதி நாயக்கர் முகத்தில் காணப்பட்ட குறிப்பை நன்கு உற்றுக் கவனித்தான்.

"நல்ல கூட்டமோ, நான் வரவில்லை, ஊரில் அவனுக்குநல்ல மதிப்பு இருக்கிறது, போலும்!" என்று அலட்சியமான குரலில் பேசினார் கஜபதி நாயக்கர்.

"என்னங்க உங்களை விடவா அவருக்கு மதிப்பு வந்துவிடும்? ஆனால் நீங்கள் தான் ஒருவரோடும் நெருங்கிப் பழகமாட்டேன் என்கிறீர்களே?"

"ஆமாம் இந்தப் பிச்சைக்காரப் பயல்கள் கூட்டத்தில் நான் பேசவேண்டும். அவன் எங்கும் போவான், எதிலும் பேசுவான். குடும்ப மதிப்பு, கௌரவம் எதுவும் தெரிந்தால் தானே அந்த முட்டாப்பயலுக்கு" என்றார் நாயக்கர்.

"அது சரிதானுங்க, உங்களுக்கு வயது ஆகிவிட்டது. ஒரே ஒரு பொண்ணு, கமலா மட்டும்தான் உங்களுக்கு இருக்கிறாள். நாளைக்கு யார் கையிலும் பிடித்து கொடுத்து விட்டால், சொத்து, வீடு, எல்லாம் உங்கள் தம்பிக்குத்தானே. அவருக்கு, இரண்டு பையன்கள் இருக்கிறார்கள். உங்களுக்கு என்ன வேண்டியது இருக்கிறது? அவருக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள் அனுபவிக்க; ஆகையால் அவர் பிள்ளைகளுக்

குப் புகழ் தேடி வைக்கிருரு" என்று மெள்ள, கஜபதி நாயக்கர் உள்ளத்தில் தம்பிமேல் பகை உண்டாக விதைபோட்டான் வேலு.

"அப்படியா சொல்லுகிருய். இந்த கஜபதி நினைத்தால், கோவிந்தசாமியும், அவன் பிள்ளைகளும், பிச்சை எடுக்கவேண்டியதுதான்: விரல் அசைத்தால் பறந்து விடுவான்; யார் தயவில் அவன் இருக்கிருன்; மாந்தோப்பை நான்தான் அனுபவிக்கிறேன். அவன் கூடதன் தோப்பு என்று சொல்லுகிருனும். பார்ப்போம்"என்ருர் நாயக்கர்; அவர் குரலில் கரகரப்பு இருந்தது.

"தோப்பைத்தானே சொல்லுகிறீர்கள். ஆமாம், அது, தன் தகப்பனுருக்குத் தான் சேர்ந்தது. நீங்கள் சும்மா தற்போதுஉபயோகிப்பதாக அல்லவா ராஜரத்தினம்கூறுகிருன்; இதேவார்த்தையைக்கூட சுமதியும் என்னிடம் சொல்லியிருக்கிருளே".

"சொல்லுவா,...சொல்லுவா,...ஆமாம் அவள் அப்பன் கண்ணப்ப முதலியார் சம்பாதித்தது பார்" என்று கூறி முடித்துக்கொண்டு நாயக்கர் சாப்பிட எழுந்து சென்றுவிட்டார்.

வேலுவுக்கு சுமார் 23 வயது இருக்கும்; அவன் ஒரு பணப்பேய்; அவன் பணத்தாசைக்குப் பலியானது ஆறுமுகநேரியில் எத்தனையோ குடும்பங்கள் உண்டு; ஏழை எளியவர்களுக்கு, பணம் ஒத்தாசை செய்வதுபோல்ஆசைவார்த்தைகள் ஆயிரம் சொல்லி, அவர்கள் சொத்து வீடு வாசல் எல்லாம் எழுதி வாங்கிக்கொண்டு தெருவில் அடித்துத் துரத்தி விடுவான்; அவனுடைய நண்பன் தான் பாண்டியன் என்பவன்; இவனுடைய பூர்வீக ஊர் ஆறுமுகநேரி இடையாது; தன்னுடைய பாட்டி ஆறுமுகநேரியில் பிறந்ததாகக் கூறிக்கொள்வான்: பாண்டியனுக்கு வீடுகிடையாது: நாய்க்கு எலும்புத்துண்டு போட்டால், எங்கும் போவது போல, பாண்டியன் வேலுவோடு எங்கும் செல்வான்; ஒன்று இரண்டு வேலு சில தடவைகள் அவன் கையில் கொடுப்பது உண்டு: நாள் கணக்கில் பட்டினி இடக்கும் ஆற்றல் வாய்ந்தவன். இரவுநேரங்களில் வேலு மடத்தில் தூங்குவான். எப்படியும் நாய்க்கர் குடும்பத்தில், இரண்டு பேருக்குமிடையில் பகைமையை வளர்த்து, அவர்களைப் பிரித்துவிட வேண்டுமென்றும், கோவிந்தசாமி நாய்க்கர் சொத்தை எழுதி வாங்கிவிட வேண்டும் என்றும் வேலு ஒரு எண்ணம் வைத்திருந்தான்; அதற்காகத்தான் கொலை, கொள்ளை முதலிய குற்றங்களுக்கு அஞ்சாத பாண்டியனுக்குத் தீனி போட்டு வளர்த்து வந்தான்.

'மாந்தோப்பு தன்னுடையது, என்று கஜபதி நாயக்கர் கூறிவிட்டு சென்றதும், வேலு வெளியே வரவும் பாண்டியன் தலையை சொறிந்துகொண்டு, வேலை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

• • •

இந்தநேரத்தில் காந்தாவைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

லக்ஷுமி அம்மன் கோவில் பின்புறம் மூன்று வீதிகளும் ஒன்று சேருகிற முச்சந்தி ஒன்றிருக்கிறது. முச்சந்திக்கு இடது புறத்தில் நாலைந்து வீடுகளுக்கப்பால் ஒரு சிறிய குடிசை வீடு இருக்கிறது; வீட்டின் முன்பு, போடப்பட்டப் பந்தலில்முல்லைச்செடி படர்ந்து, வீட்டின் மேல், தன் கொடிகளைப் பரப்பிக் கொண்டிருக்கும். அதுதான் ஒலிமுத்துப் பண்டாரம் வீடு; ஒலிமுத்துப் பண்டாரத்திற்கு ஒரே ஒரு மகள்; சீராகவும் செல்வமாகவும் வளர்க்கப் பட்டாள் காந்தா. காந்தாவுக்கு வயது சுமார் 16 இருக்கும்; பருவத்துக்கேற்ற வளர்த்தியுடன், பார்வைக்குக் கம்பீரமாக இருப்பாள் காந்தா; முல்லை போன்ற வரிசையாக அமைந்த பற்களை வெளியே தெரியும்படி முகமலர்ச்சியோடு அவள் சிரித்தால், அவள் முகம், செவ்வானம் போல் சிவந்து விடும்; எப்போதுமே அவள் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்து விளையாடும்.

ஒலிமுத்துப்பண்டாரம், வேலுவின் வீட்டில் வேலை செய்து காலம் தள்ளினன்; இந்த உறவில் வேலு அடிக்கடி காந்தாவீட்டிற்கு வருவான்; தன்னையொத்தப் பெண்கள் பள்ளியில் படித்துவிட்டு, கம்பீரமாக சாயநேரம் வீடுதிரும்புவதை காந்தா கண்கொட்டாமல் பார்த்து பெருமூச்சி விடுவாள்; காந்தா ஆறுமுகநேரி ஹைஸ்கூலில் சென்ற ஆண்டு

5வது பாரம் படித்துவந்தாள்; வறுமையின் பிடி, அவளை மேலும் படிக்க ஒட்டாது தடுத்து விட்டது; பள்ளியின் வாழ்க்கையைப்பற்றிப் பேசினுள் ஏங்குவாள்; துடிப்பாள்.

வேலுவின் கழுகுப்பார்வை காந்தாமீதுவிழுந்தது; கொழு, கொழு என்று வளர்ச்சிபெற்றிருந்த அவள் உடலில் இன்பம் காண ஆசை கொண்டான் வேலு.

பள்ளிக்குப்போக முடியவில்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்த காந்தாவுக்கு ஆசை வார்த்தைகள் ஆயிரம் அள்ளி வீசுவான்; வறுமையில் சிக்கி சித்திரவதை படக்கப்பட்ட காந்தாவுக்கு வாழ் வளிப்பேன் என்று உறுதிமொழி கூறினுன். காந்தாவைத் திரும்பவும் பள்ளியில் சேர்க்க ஏற்பாடு துரிதமாகச் செய்தான்; வேலுவைப்பற்றி அவள் கேள்விபட்ட விஷயங்களையெல்லாம், மனத்திரையை விட்டு அகற்றி வேலுவை, நல்லவனுகச் சித்திரம் தீட்ட ஆரம்பித்தாள் காந்தா. பத்துரூபாய் நோட்டுகளைப் பறக்கவிட்டு, அந்த பைங்கிளியை தன் படுக்கை அறைப் பதுமையாக்க நினைக்கிருன் வேலு என்பதை முதலில் அவள் அறியாமல், அவனேடு, சிரித்து, குழைந்து நெருங்கிப் பழகினுள்: காலப் போக்கில் காந்தாவின் சிரிப்பிலிருந்த காந்தம், வேலுவை, எந்நேரமும், ஒலி முத்துப் பண்டாரம் வீட்டில் முகாமிடச் செய்தது: வேலுவும், பாண்டியனும், திட்டங்கள் பல வகுக்க, ஒலி முத்துப் பண்டாரம் வீட்டை உபயோகித்தார்கள். வேலுவின் அந்தரங்க வாழ்க்கை குறிப்புகளெல்லாம், ஒலிமுத்து பண்டாரம் வீட்டில்தானிருந்தன.

6. தேங்காய் திருட்டு

கஜபதி நாயக்கர் வீட்டின் முன்பு, 'கேரம்' விளையாட்டு ப்லமாக நடந்துகொண்டிருந்தது. விளையாட்டில், கமலா, காந்தா, லட்சுமி அம்மாள், ரேணுகா ஆகியவர்கள் பங்கு கொண்டார்கள். கஜபதி நாயக்கரின் ஒரே மகள் தான் கமலா. அவளும் உள்ளூர் பள்ளிகூடத்தில் 4வது பாரம் படித்து வந்தாள்; லட்சுமி அம்மாள் கோவிந்தசாமி நாயக்கரின் மனைவி; லட்சுமி அம்மாளுக்குக் கமலாவைப்பார்க்காமல் ஒரு நிமிடமும் இருக்கமுடியாது. கமலாவின் தாய், அவள் சிறுவயதாக இருந்தபோது, இறந்துவிட்டபோதிலும், உண்மையில், லட்சுமி அம்மாள் தான் கமலாவின் தாயாராக இருந்து அவளை வளர்த்து வந்தாள். கஜபதி நாயக்கருக்கு, கோவிந்தசாமி நாயக்கர் மீது, பகைமை உணர்ச்சி வளர்ந்த போதிலும், லட்சுமி அம்மாளுக்கு, அப்படிப்பட்ட எண்ணம் மனதில் உதிக்கவில்லை, சொல்லப்போனுல், லட்சுமி அம்மாள் தன் பிள்ளைகளான ராஜரத்தினம், சத்தியவேல், ஆகியவர்களைவிட கமலாவை அளவு கடந்து நேசித்தாள். ஒய்வு நேரங்களில், கமலாவும், லட்சுமி அம்மாள் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு, ஊரில் நடக்கும் விஷயங்களை,

குறைந்த விலை ! சிறந்த வேலை !

ஏ. டி. எச்.

டி ர ஸ் ஸ்

(அரசாங்க உதவிபெற்றது)

16, அருணாசல நாய்க்கன் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

நாங்கள் B & C துணிகளினால் அளவெடுத்தும், ரெடிமேடாகவும் குறைந்த விலையில் சிறந்த முறையில் குறித்த காலத்தில் ஆடைகளைத் தைத்துக் கொடுக்கிறோம்.

எங்களிடம் ஒருமுறை வருகைதந்து உண்மை உணருங்கள் !

உரிமையாளர்,

A. ஆறுமுகம். G. C. T.

மணிகணக்கில் பேசுவாள். லக்ஷ்மி அம்மாளும் பொறுமையோடு கமலா சொல்வதைக் கேட்டுக்கொண்டு இருப்பாள்.

காந்தாவும், ரேணுகாவும், கமலாவின் நெருங்கியத்தோழிகள்; காந்தாமீது வேலு ஒரு கண் வைத்திருந்தான். ஒலி முத்துபண்டாரத்தின் மகளான காந்தா கமலாவின் அந்தரங்கத் தோழி.

விளையாட்டு, நன்கு நடந்து கொண்டிருக்கும்போது, சேகர் சோர்ந்து வீட்டிற்குள் நுழைந்தான்; அவன் முகத்தில் வியர்வைத் துளிகள் வடிந்த வண்ணமாக இருந்தது.

சேகரைப் பார்த்ததும் கமலாவின் முகத்தில், சொல்லமுடியாத மகிழ்ச்சியின் சாயல் பிரதிபலித்தது.

"அத்தான் எங்கே போயிருந்தீங்க? ஏன் சோர்ந்து போய் இருக்கீங்க" என்று விளையாட்டை விட்டு எழுந்து சேகரை நோக்கி ஓட ஆரம்பித்தாள் கமலா.

"ஆமாம், அத்தானல்ல, இனி அவள் இங்கு நிற்பாளா? கமலாவுக்கு சேகர் என்றாலே போதும்" என்று நக்கலாகக் காந்தா பேச ஆரம்பித்தாள்.

"சேகர், நல்லவன் காந்தா, கமலாவை சேகருக்குத்தான்

திருமணம் செய்ய நாங்கள் தீர் மானித்திருக்கிறோம்" என்று புன்முறுவலோடு லட்சுமி அம்மாள் பேசினாள்.

"சித்தி, நீங்கள் எல்லோரும் விளையாடுங்க. எனக்குப் பதிலாக, அத்தான் விளையாடுவார். நான் நம்ம மாந்தோப்புக்குச் சென்று இளநீர் வெட்டிக் கொண்டு வருகிறேன். அடேய்! தாண்டவராயா, வா, என்னோடு தோப்புக்கு; அத்தானும் சோர்ந்து இருக்கிறார். நம் மரத்துக்குச் சென்று சில இளநீர் வெட்டி வரலாம்" என்று கூறிக்கொண்டு தாண்டவராயனோடு, தோப்புக்கு விரைந்தாள் கமலா.

தாண்டவராயன், கஜபதி நாயக்கர் வீட்டில், சிறு வயதில் இருந்து வளர்ந்தவன். நல்ல சுபாவம் உள்ளவன். ரொம்ப நன்றி அறிதல் உள்ளவன்; ஆனால் தகாத செயல், செய்பவர்களைக் கண்டால் அவனுக்குப் பிடிக்காது. அப்போது அவன் பொலலாதவனுகி விடுவான்; அதிலும், கமலம் என்ன சொன்னாலும, தன் உயிரைக் கொடுத்தும், கூட அதை நிறைவேற்ற அவன் தயங்கமாட்டான். இருவர்களும் தோப்பை நோக்கி விரைந்து சென்றார்கள்;

தோப்புக்குள் கமலாவும், தாண்டவராயனும் சென்ற போது, கமலா எண்ணமெல்லாம், தோப்பைப்பற்றி நினைக்க ஆரம்பித்துவிட்டது; அந்த ஊரிலே, நாயக்கர் தோப்பு என்றால் தெரியாதவர்கள் இருக்கமாட்டார், தென்னமரங்களும், மாமரங்களும் நிறைய உண்டு; இந்தத் தோப்பைத் தான், கஜபதி நாயக்கர் அபகரிக்கவேண்டுமென்று திட்டம் தீட்டி வைத்திருந்தார்.

தோப்பினுள் சென்றதும் கமலா மரத்தை எட்டிபார்த்தாள்; அவளுக்குத் தூக்கிவாரி போட்டது; மரத்தின் மேல்: பாண்டியன் ஏறி, உச்சியில் இருந்துகொண்டு இளநீரை வெட்டிக்கீழே போட்டவண்ணமாக, இருந்தான்; தாண்டவராயன், பாண்டியனை மரத்தின் மேல் பார்த்ததும், அவன் கண்களில் இருந்து கோபக்கனல் பறந்தது, சொல்லமுடியாத ஒரு வெறுப்பின் சாயல் அவன் முகத்தில் தெரிந்தது.

பாண்டியனைப் பார்த்ததும், கமலாவின் கோபம் கட்டுக்கடங்காமல் போய் விட்டது.

"என்ன? தேங்காய் திருடவந்தாயா? எல்லோரும் வீட்டில் இருக்கும்போது, பட்டப்பகலில் திருட்டா? இந்தத்திருட்டுத் தனம் எத்தனை நாட்களாக நடக்கிறது? கீழே இறங்கு மடையா" என்றாள் கமலா; அவள் கண்களில் தீப்பொறி பறந்தது.

"என்னம்மா, வாயில் வந்தபடி பேசிற. கொஞ்சம் அடக்கிப் பேசு, நான் ஒண்ணும் திருடவரவில்லே. லட்சுமி அம்மாள் தான் இளநீர் வெட்டி வரச்சொன்னது; அவங்க மரத்திலே, அந்தஅம்மா உத்தரவின்மேல் வெட்டுகிறேன்; ஆமாம் ஜாக்

221, Pilliar Koil Street,

MADBAS-3

221, பிள்ளையார் கோயில் தெரு,

சென்னை-3

இரதை, வாயை மூடு" என்று மரத்தில் இருந்தவண்ணமாகப் பேசினான், பாண்டியன்.

"லட்சுமி அம்மாளாச் சொன்னது! சீ, நாயே! அந்த அம்மாள் என் வீட்டில் இருக்கிறார்கள், அவர்களுக்காகத்தான் நான் இளநீர் வெட்ட வந்துள்ளேன், தாண்டவராயா, இந்த நாயை வெளியே விடக்கூடாது, பிடித்துக்கட்டு. போலீசுக்கு போன் பண்ணவேண்டும்; நம் தோப்பில் திருடுப் போவதற்கெல்லாம், இந்தப்பயல் பாண்டியன் தான் காரணம்" என்று கடுகடுப்பான குரலில் கமலா சொன்னாள்.

கமலா, உத்தர விட்டதும் தாண்டவராயன், முண்டாசு கட்டுக் கட்டிக் கொண்டான்.

"ஏய், பாண்டியா, யாரிடம் உன் வாலைக்காட்டுகிறாய், வாலை வெட்டி விடுவேன், கமலா வையா எதிர்த்துப் பேசுகிறாய்! திருட்டுப்பயல், கீழே இறங்குகிறாயா? அல்லது கல்லால் அடிக்கட்டுமா" என்று கூறிவிட்டுக் கீழேக் கிடந்தக் கல்லை எடுக்க ஆரம்பித்தான், தாண்டவராயன்.

இதற்குள், கமலா, தாண்டவராயனிடம் "நீ இந்தப்பயலை பிடித்துக் கட்டிவை, நான் வீடு சென்று போலிசுக்கு போன் செய்கிறேன்" என்று கமலா, வீட்டிற்கு விரைந்து சென்றாள்.

நிலைமை மோசமாகி விட்டதைத் தெரிந்து, எப்படியும் தப்பித்து ஓடிவிட வேண்டும் என்று நினைக்க ஆரம்பித்தான் பாண்டியன். தென்னை மரத்தை யொட்டிதான் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டிருந்தது; தாண்டவராயன் கண்ணைப் பார்த்து, மெள்ள, காம்பவுண்ட் சுவரில் கால் வைத்து, காம்பவுண்ட் சுவரைத் தாண்டி குதித்து ஓடிவிட்டான் பாண்டியன்.

பாண்டியனுக்கு ஏற்பட்டப் பசியைப்போக்கத்தான் அவன் திருடவந்தது; இப்படித்திருடிதான் அவன் காலம் கழித்து வந்தான்; ஆனால் இன்று அவன் தைரியமாகக் கமலா விடம் பேசியதற்குக் காரணம்

இல்லாமல் இல்லை. வேலு, பாண்டியனைத் திருடத்தூண்டி விட்டிருந்தான்; இதோடு இந்தத்தோப்பு கஜபதி நாயக்கருக்கும், கோவிந்தசாமி நாயக்கருக்கும் பொதுவாக இருந்த போதிலும், கஜபதி நாயக்கர் இதில் உரிமை கொண்டாடினார்; இந்தத் தோப்புத் தகராறைப்பெரியதாக்கி, நாயக்கர் குடும்பத்தில் பகைமை உண்டாக்கவேண்டுமென்பதுதான் வேலு போட்டதிட்டம்: இதற்குப் பாண்டியன் ஒரு கருவி; இந்தத்தகராறைப்பெரியதாக்க எண்ணியே திருட்டு அம்பலமாகியதும் பாண்டியன், பயமும், பீதியும் கொண்டு, ராஜரத்தினம் அறையுள் நுழைந்தான். பாண்டியனுக்குத் தன் பயமும், ஏற்பட ஆரம்பித்து விட்டது; கமலா, போலிசுக்கு போன் பண்ணிவிட்டாள் என்பதை அறிந்ததும், தன்னைப் பாதுகாத்துக்கொள்ளத்தான், ராஜரத்தினமிடம் தலைவிரிகோலமாக ஓடிவந்தான். அவன் நிலையைப்பார்த்ததும்,

"என்ன நடந்தது பாண்டியன்? ஏன் இப்படி வெறிபிடித்தவன் போல் காணப்படுகிறாய்?" என்று சுமதியும், ராஜரத்தினமும் கேட்டார்கள்.

பாண்டியன் ஒன்றும் பேசாமல் ராஜரத்தினத்தையும், சுமதியையும் அறையின் வெளியே அழைத்து வந்து கீழே, போலீஸ்காரர்கள் நிற்பதையும் அவர்களிடம் கமலா, பேசிக் கொண்டிருப்பதையும் காட்டினான். கையில் ஒரு தடியுடன் வெறிபிடித்தவர் போல்,

சர்வதேச பால்பண்ணை மகாநாடு

ஜூன் 29-ஜூலை 4 தேதிகளில் லண்டனில் நடைபெறும் சர்வதேசப் பால்பண்ணை மகாநாட்டில் 52 நாடுகளைச் சேர்ந்த 3000பால் பண்ணை நிபுணர்கள் பங்குகொள்கிறார்கள். மகாநாட்டில், 400 அறிவியல் கட்டுரைகள் படிக்கப்படும். மகாநாட்டு நிகழ்ச்சிகள் ஆங்கிலம், பிரஞ்சு, ஜர்மன் மொழிகளில் நடைபெறும்.

மகாநாட்டில் பங்குறும் இந்தியர்கள் வருமாறு: கல்கத்தாவைச் சேர்ந்த திரு ஏ. ராய் சௌதரி (இப்போது லண்டனிலுள்ள யுனைடெட் டெய்ரீஸ் லிமிடெட்டில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்). மணிபுரியைச் சேர்ந்த திரு. ஆர். கே. பார்கவா (ரீடிங் பல்கலைக் கழகத்தில் பால் பண்ணைத்துறையில் எம். எஸ்ஸி பட்டமாணவர்). கார்னலி (பஞ்சாப்)லுள்ள தேசீய பால்பண்ணை ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் டி. எம். பால்.

மகாநாட்டையொட்டி நடந்த பத்திரிகையாளர் விருந்தில், லண்டன் யுனைடெட் டெய்ரீஸ் எஞ்சினீயரிங் கம்பெனிக்கு சுமார் 1;250,000 பவுன்கள் பெறுமானமுள்ள பால் பண்ணை எந்திரங்களுக்கு ரஷ்யாவிலிருந்து 'ஆர்டர்' கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது.

கஜபதி நாயக்கர் வீட்டிலிருந்து ஓடி வருவதையும் அவர்கள் பார்க்கத்தவற வில்லை.

(தொடரும்)

M. KANNAN

Government Approved
Fabricator and Contractor

(Regd. 10)

30, Wall Tax Road, Madras-3

★

Please Contact Us For

COLLAPSIBLE GATES, MAIN GATES, WINDOW GRILLS, VENTILATORS & ALL OTHER BUILDING MATERIALS

★

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas Welding
Stainless Steel Aluminium Gas Cutting
Works are also undertaken.

OUR MOTTO IS TO
SATISFY OUR CUSTOMERS

வானவில்லாக வாழ்வில் வந்தவள்

—[கே. ராமசாமி]—

நான் தடுமாறுகிறேன், தடுமாற்றத்திற்குக் காரணம் என் வேலைக்காரி தான். அவளது முகமும், முகத்தில் மலரும் புன்னகையும் என்னைக் காந்தமாக் கவர்ந்து விட்டது. அவளை ஒருநாள் பார்க்காவிட்டாலும் என் உயிர் போய் விட்டது போலிருக்கும். ஆனால் அவள் என்னை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. நெஞ்சு கதறக்கதற, துடிக்கத் துடிக்க, அவளை என் கண் பார்வையினின்றே விலக்கினேன். அப்பா!...நான் துடித்த துடிப்பு காரணம்?

ஒரு நாளுமில்லாத திருநாளாக இன்று ஏன் என் மனம் தடுமாறவேண்டும்? எனக்கு காரணம் புரியவில்லை. மனம் அடிக்கடி எங்கோ ஒரு குழப்பமும் கூச்சலுமான தனிஉலகத்தில் பறந்தது. காண்பவைகள் எனக்கு உள்ளத்தில் பிரேமையை மூட்டின. செவியில் படுபவையெல்லாம் கழுதையின் கத்தலென்றாலும் கீதங்களாய் படுகின்றன.

வாழ்விலேயே இன்றுதான் எனக்கு ஒரு ஆசையுண்டாகிறது.

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கொள்கை இன்றுதான் எனக்கு உதயமாயிருக்கிறது, கனியை சுவைப்பது போல் வாழ்வை உருண்டையாய் உருட்டிவைத்துக் கொண்டு அணுவணுவாய் சுவைக்க மனம் தாவியது.

காரணம்?...

இத்தனை நாட்களாக செத்துக்கிடந்த நான் உயிர்த்தெழ எது காரணம்? நடைப்பிணமாய் அலைந்த நான் விறுவிறுப்பும் வேகமும் கொண்டு சிலிர்க்க யார் காரணம்? ஏன் இப்படி திடீரென வாழ்வில் ஒரு பிடிப்பு ஏற்படவேண்டும்?

நான் ஒரு ஒண்டிக்கட்டை. என் ஒருவனின் வயிற்றையும் வாயையும் நிரப்ப என்று ஒரு பத்திரிகை ஆபீஸில் உதவி ஆசிரியனாக வேலைபார்க்கிறேன் வேலைபார்ப்பது, நல்ல நல்ல கதைகளாக எழுதித்தள்ளி, பெயரும் புகழும் அடைய வேண்டும் என்ற ஆசையினால் அல்ல, வயிறு என்று ஒன்றை இறைவன் படைத்துவிட்டாரல்லவா? அந்த வயிறு, உணவு உணவு என்று தினம் மூன்று முறைஅழுகிறதல்லவா? அதற்காகத்தான் பிரும்மச்சாரிதான் நான். கல்யாணத்தை வெறுத்துக்கொண்டிருந்தவன், ஆம் நேற்றுவரை நான் கல்யாணம் காதல் என்பவைகளை வெறுத்தவன்.

ஆனால் இன்று

என்வாழ்விலே ஒரு திருப்பமா இந்த 'புது' உணர்வு?

நான் எனக்கென்று ஒரு ரூம் எடுத்து அதில் தங்கியிருக்கிறேன். என் வருமானத்தை என் செலவுகளுக்குள் சரியாகப் பிடித்து அமுக்கிக் கொள்வேன். மிச்சம் என்பதும் கடன் என்பதும் என்வாழ்வில் கிடையாது.

விடிகாலையில் எழ வேண்டியது, குளிக்கவேண்டியது, பேப்பர் பார்க்கவேண்டியது, சாப்பிடவேண்டியது. இதே ரீதியில் என் வாழ்வுத்தேர் ஓடியது.

ஆனால் இடையில் இன்று—

இந்த ஒரு உணர்வு ஏன் குறுக்கிட வேண்டும்? புரியவில்லை.

தினமும் எனக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு வருவதற்காக மாதம் பத்து ரூபாய்என்று பேசி ஒரு பெண்ணை அமர்த்தியிருந்தேன். அவள் நல்ல இளவயசுப் பெண். அழகெல்லாம் சாமானியமானதுதான். பேரழகு என்றும் சொல்லமுடியாது. அவலட்சணம்என்றும் சொல்ல முடியாது. மாநிறம், நல்ல உயரம், அவளுக்கு லட்சுமி என்று பெயர்.

இவள்தான் என் மனதைக் கலக்கிவிட்டவள்.

ஏனோ அவளது முகமும் முகத்தில் மலரும் புன்னகையும் என்னை காந்தமாகக் கவர்ந்தன. அவள்மேல் எனக்கு ஒரு பிரியம். வேறு எந்தப் பெண்ணும் கவர்ந்திராத என்னை இந்த ஏழையான, அழகற்ற, படிப்பில்லாதபெண் கவர்ந்து விட்டாள். அவளை ஒருநாள் பார்க்காவிட்டாலும் அன்று என் உயிரே போய் விட்டது போலிருக்கும்:

சொந்தம் பந்தம் பாசம் என்று எதுவுமேயில்லாம லிருந்த என்னை பாசச் சேற்றில் ஆழ்த்திவிட்டாள். அதிகமாக யாருடனும் பழகியறியாத என்னை அவள் அப்படிக் கவர்ந்து விட்டாள்.

இத்தனைக்கும் அவள் என்னை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. வருவாள், போவாள்; அவ்வளவுதான்.

அவள் வந்தால் 'அப்பாடா, வந்துவிட்டாள்' என்று இருக்கும்; போய்விட்டால் 'ஐயோ, போய்விட்டாளே' என்று இருக்கும் அவளுடன் விளையாட்டாகப் பேசுவதில், அவளுக்கு சினிமாவுக்கும் போக காசு கொடுப்பதில், அவளை கிண்டல் செய்வதில், அவள் வாயை கிமிண்டிவிட்டு வேடிக்கைபார்ப்பதில் நான் தனி இன்பம் கண்டேன். சீக்கிரத்தில் அவளை அனுப்பிவிடமாட்டேன். சினிமாக்களைப் பற்றிக் கேட்பேன். அவளும் சளைக்காமல் சொல்வாள். சினிமா என்றால் போதும் அவளுக்கு. 'ஒரு பாட்டுப் பாடேன்' என்பேன். ஓடிவிடுவாள்! 'பீச்சுக்கு வருகிறாயா?' என்றால் 'போங்க ஸார்! என்று உதறிவிட்டுப் போய் விடுவாள். அதிகம் ஏன்?... அவள் இல்லாத வாழ்வு சூரியன் காணாத உலகம்போல்

வெறும் இருட்டு, இருட்டு என்றே தோன்றியது. அவள் என் வாழ்வைவிட்டு விலகிவிட்டால் எனக்கு எல்லாமே போனது போல்தான் இருக்கும். அப்படி ஆகிவிட்டது என் நிலை.

இதற்குப் பெயர் காதலா? 'இருக்காது' என்று நானே தேறுதல் சொல்லிக் கொள்வேன். மனம் சிரிக்கும் 'பைத்தியக்காரா! பின் இது என்ன? என்று கேட்கும். நான் திணறுவேன்.

அவளை வாழ்க்கைத் துணைவியாக அடைய.

ஐய்யய்யோ! வாழ்க்கைத் துணைவியாகவா...? என் மனைவியாக இவளா...? ஏன் இவளுக்கு என்ன?

இவளுக்கு ஒன்றுமில்லை. ஆனால்...நான்?

இவளை நிறுத்திவிடுவதுதான் நல்லது. நானே ஹோட்டலில் போய் சாப்பிட்டுக்கொள்ளலாமே. அலறிய மனதை அழுத்திக்கொண்டேன்.

அவள் வந்தாள். தலைநிறைய பூவைத்திருந்தாள். ஏதோ விசேஷமாம். புதுப் புடவை அவள் உடலைச் சுற்றியிருந்தது. வெண்மை தெறிக்கும் ஒரு புன்னகை.

நான் அவளைப் பார்த்தேன். கண்களை கண்ணீர் கவ்வியது.

இவளை...இவளை...நான் பிரியத்தான் வேண்டுமோ? ஆம்.

Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. 5.)

A·C,C CEMENT STOCKIST

2, Sankari Road,

Trichengode,

(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பணவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமானவேலைத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்துகொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

சீ! இவளை பார்க்காதே, பார்க்காதே.

நான் பார்வையை வேறு திசைக்கு மாற்றினேன். அங்கு, காதல் ஓவியம் ஒன்று கண்மலரில் மின்னலெனப் பாய்ந்து இடியாக மனப்பஞ்சுப்பொதியில் இறங்கியது.

''லெட்சுமி!'' என்றேன்.

அதை எப்படிச் சொல்வது? அதை எப்படிச் சொல்வது? சொல்லலாமா?

''நீ...'' என்றேன்.

என்னால் ஏன் தொடர முடியவில்லை? 'வாயே! பேசு, பேசு! ஊம்!'

''நாளையிலிருந்து'' என்றேன். முடி உடனே! அவளை விலக்கு உன் வாழ்விலிருந்து!

''வரவேண்டாம்!'' என்றேன் வென்துவிட்டேன் இதற்குள்.

''ஏனுங்க!'' என்றாள். ஹோட்டலில் போயே சாப்பிட்டுக் கொள்கிறேன். நீ இத்தனை நாள் இருந்ததற்கு இந்தா இதை வைத்துக்கொள்!''

நான் கொடுத்த, என் போட்டோப்படம் அவளுக்கு திகைப்பைத் தந்திருக்க வேண்டும்.

''இந்தப் படமா? இது யாருடைய படம்? இது எதற்கு எனக்கு?'' என்றாள்.

''அதைக் கூர்ந்துபார் லெட்சுமி'' என்றேன்.

அவளுக்கு அது யாரென்று புரிந்ததோ புரியவில்லையோ, ஒரு விதத் திகைப்புடன் என்னைப் பார்த்தாள். 'இதை ஏன் நம்மிடம் கொடுக்கவேண்டும்? என்று எண்ணினாளோ?

''வருகிறேன் ஸார்!'' என்று சொல்லிவிட்டு, என்னைக் கிழித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டாள். நான் என்னை வைது கொண்டேன்.

அவள்மேல் நான்கொண்டது காதலா? ஆம்மாம். ஆனால் அவளை நான் ஏன் கல்யாணம் செய்துகொள்ளவில்லை?

உங்களுக்கே புரிந்திருக்கும் ஏனென்று.

இளைஞனாகவும் வாலிபனாகவும் ஆணழகனாகவும் புன்னகை செய்துகொண்டிருந்த அந்த 'போட்டோ' வையும் என்னையும் ஒப்பிட்டுப்பார்க்கும் முயற்சியில் அவள் இறங்கியிருந்தால் அவளுக்கு நிச்சயம் தோல்விதான் கிடைக்கும்.

நான்தான் அந்த இளைஞன் என்று அவள் கண்டுபிடித்திருக்கமாட்டாள். அது எனது முப்பதுவருஷத்திற்கு முந்திய வருஷம்.

இப்போது நான் யார்? எப்படிப்பட்டவன்?

சொல்லுங்கள். அவளை விலக்கியது நியாயமா நியாயமில்லையா? பஞ்சுபோல் நெருப்பான் என்முன் அவள் இருக்கலாமா? பருவமும் பருவமும்

சீனப் பெண்ணின் தீரச் செயல்

கான்ஸாஸ் நகர் பல்கலைக் கழக மகளிர் அமெரிக்க சங்கம் இந்த ஆண்டு டாக்டர் சியன் ஷியுங் வூ என்ற பௌதிக விஞ்ஞானிக்குப் பரிசு வழங்கியிருக்கிறது. அணுசக்திப் பௌதிகத்தில் பெரும் சிக்கலாக இருந்த ஒரு புதிருக்கு விடை கண்டவர் என்பதற்காக அந்த அம்மையாருக்குச் சங்கம் இப் பரிசை வழங்கியது. ஷாங்காயில் பிறந்தவர் டாக்டர் வூ; தற்போது கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் பௌதிகப் பேராசிரியராக இருக்கிறார். சோதனை முறைப் பௌதிகத்தில் உலகில் தலைசிறந்து விளங்கும் பெண்மணி என இவர் பாராட்டப் பெற்றுள்ளார்.

—✻—

பிரிட்டிஷ் கௌன்சிலில் இந்தியர்கள்

பிரிட்டிஷ் கௌன்ஸில் அண்மையில் லண்டனில் நடத்திய 13-வது ஆண்டு விருந்தில், கௌன்ஸில் மான்யம் பெற்ற பின்கண்ட இந்தியர்கள் கலந்து கொண்டார்கள்: திரு. எஸ்.கே. தேசாய், ஆங்கில விரிவுரையாளர், அரசினர் கல்லூரி, கோலாப்பூர்; (இவர் லீட்ஸ் பல்கலைக் கழகத்தில் பயின்று வருகிறார்). திரு. எஸ். கே. மேரோத்ரா. விரிவுரையாளர், ஸாகர் பல்கலைக் கழகம், (இவர் லண்டனிலுள்ள கீழ்த்திசை-ஆப்பிரிக்க கலைகள் பள்ளியில் பயிற்சி பெறுகிறார்). ஆந்திரா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திருவாட்டி ஐ. ராவ். (இவர் லீட்ஸ் பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெறுகிறார்). மைசூர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. பி. ஷேக் அலி (இவர் கீழ்த்திசை - ஆப்பிரிக்கக் கலைகள் பள்ளியில் பயின்று வருகிறார்). சென்னை பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் திரு. கே. சுப்பிரமணியம் (இவர் நாட்டிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெறுகிறார்):

சேர்ந்தால்தான் ஆபத்து வருமா? என்னுடைய உணர்வு அவளைக் கசக்காது என்பது என்ன நிச்சயம்?

வாழ்க்கையின் இன்பம் முழுவதையும் இளமை முழுவதையும் ஒட்டிவிட்டு, வெறும் வதங்கிய உருவமாக இன்றோ நாளையோ என்று கிடக்கும் கிழவனை நான், வாழ்க்கையின் புதுபருவத்திலே, கனிகளும் மலர்களும் பூத்துக் குலுங்கும் இளமைத்தோட்டத்திற்குள் அடியெடுத்துவைக்கும் யௌவனக் குமரியான அவளை நினைப்பதும் பாவமே!

அதனால்தான் நெஞ்சுகதறக் கதற, துடிக்கத் துடிக்க, அவளை என் கண்பார்வையினின் றே விலக்கினேன். அப்பா!...நான் துடித்த துடிப்பு!

அவளைப் பிரிந்தபின் நான் வாழ்ந்தேனா வீழ்ந்தேனா என்பது எனக்குத் தெரியாது.

உலக அகதிகளுக்கு உதவி

உலக அகதிகள் ஆண்டு இவ்வாரம் உத்யோக பூர்வமாக ஆரம்பமாகிறது. உலகம் முழுவதிலும் கிறிஸ்தவர்கள், யூதர்கள் முஸ்லிம்கள் ஆகியோர் அதன் வெற்றிக்காக பிரார்த்தனை செய்துள்ளனர்.

ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் ஆதரவில் நடைபெறும் இத்திட்டத்தின் நோக்கம் யுத்தத்தினுல், வீடு வாசல்களை இழந்தவர்களும், அரசியல் சம்பவங்களால் நிர்க்கதியானவர்களும் புது வாழ்க்கையை ஆரம்பிக்க உதவுவதாகும்.

ஞாயிற்றுக்கிழமையில் தங்களுடைய பிரார்த்தனைகளில் அகதிகளையும் சேர்த்துக்கொள்ளும்படி, 50 கோடி உலக கத்தோலிக்கர்களை பொப்பாண்டவர் ஜான் உத்தரவிட்டார். வத்திகான் ரேடியோவில் அவர் பேசுகையில் வீடு இழந்தோருக்கு உதவி செய்யும் படியும் அவர் விசேஷ வேண்டுகோள் விடுத்தார்.

உலக அகதிகள் ஆண்டின் வெற்றிக்காக பிரார்த்தனை செய்யும்படி உலகத்திருச்சபைகளின் கவுன்சில் உலகமுழுவதிலுமிருக்கும் தனது உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

ஐ. நா. தலைமைக் காரியதரிசி டாக்டர் ஹாமர்ஷில்ட், விசேஷ அறிக்கையொன்றில் இரண்டாவது உலகயுத்தத்தின் விளைவாக நான்கு கோடி அகதிகள் இருக்கின்றனர் என்றும் இவர்களில் ஒன்றரைக் கோடி ஆண், பெண், குழந்தைகளுக்கு இன்றும் நிரந்தரமான இல்லங்கள் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"உலக அகதிகள் ஆண்டு பிரச்னைகளை தீர்த்து விட முடியாது ஆனுல் அடுத்த 12 மாதங்களில் இந்த விசேஷ முயற்சியின் மூலம் ஏராளமான அகதிகளுக்கு, அவர்கள் நீண்டகாலமாக எதிர்பார்க்கும் இலட்சியத்தை அகதி என்ற நிலையிலிருந்து விடுபடுவதை அடைய உதவி செய்யலாம். அத்துடன் மற்றவர்களின் கஷ்டங்களையும் துடைக்கலாம் என்ருர் ஹாமர்ஷீல்ட்.

ஐ. நா. ஆதரவு பெற்ற இந்தத் திட்டத்துடன் 50க்கு மேற்பட்ட அரசாங்கங்களும் அநேக தனியார் ஸ்தாபனங்களும், தனி நபர்களும் ஒத்துழைக்கின்றன.

*

வரதட்சணையின் கொடுமை!

—[ராஜ. வேதசிகாமணி]—

சமூகத்தில் வரதட்சணை என்ற ஒரு கொடிய பழக்கம் நிலவுகிறது. வரதட்சணைக்குப் பலியான குடும்பங்கள் பல உள; பிற்றருக்குத் திருமணம் நடக்கிறது; வரதட்சணை கொடுக்க மறுத்ததால் தன் அருமை மனைவியை விலக்கிவிடுகிருன்; இந்த சம்பவத்தைக் கேட்ட மாத்திரத்தில், பெண்ணைப் பெற்றத் தாய், மூர்ச்சையாகிக் கீழே விழுந்து இறந்து போகிருள்: வரதட்சணைக் கொடுமையை என்ன வென்று சொல்லுவது!

அடுத்த வீட்டுக்காரர் சாமுவேல் நாடாருக்கும் எனக்கும் அவ்வளவு பழக்கம் என்று சொல்லமுடியாது. ஏதாவது அவசியமிருந்தால்தான் அவர் என்னோடு பேசுவார்; நானும் ஏதாவது அவசியமிருந்தால் அவரோடு பேசுவேன். அவ்வளவுதான்! என் மனைவியும் அவர்மனைவியும் எப்போதாவது சிற்சில வேளைகளில் அபூர்வமாகப் பேசிக்கொள்வார்கள்.

அன்று திடீரென்று சாமுவேல் நாடார் என் முன் வந்து நின்றதும் எனக்கு ஒரே ஆச்சரியமாகத்தானிருந்தது.

"வாங்க ஐயா, உட்காருங்க" என்றேன். அவரும் உட்கார்ந்து கொண்டு முகத்தில் அரும்பிய வியர்வையை உத்தரீயத்தால் துடைத்துக்கொண்டார்.

"என்ன சமர்ச்சாரம்?" என்று நான் பேச்சை ஆரம்பித்தேன்.

"வேறு ஒன்றுமில்லே; என் மகளும் மருமகனும் கிறிஸ்மசுக்கு வர்ராங்க. அவர்களுக்கு இதுதானே முதலாவது கிறிஸ்மஸ்? மாப்பிள்ளைக்கு ஒரு மோதிரமும், ரிஸ்ட்வாட்சும் இந்தக் கிறிஸ்மசுக்கு வாங்கிச் கொடுக்கிறதாகப் பேச்சு, அறுவடை முடிஞ்சு, நெல்லு வீடு வந்து சேர்ந்தால் கையிலே பணம் புரளும். நானும் ஓடியாடிப் பார்த்தேன்; ஒண்ணும் நடக்கலே! பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் ஜவுளிஎடுக்கணும் மோதிரமும், ரிஸ்ட்வாட்சும் வாங்கணும்! மாப்பிள்ளை முன் கோபக்காரர்னு என் மகள் குளோரி சொல்லியிருக்கிருள். என்ன செய்றதுன்னு தெரியலே! ஜவுளிக்கடையிலே போய்க் கடனுக்கு ஜவுளிகள் எல்லாம் எடுத்துவிட்டேன். மோதிரமும் ரிஸ்ட்வாட்சும் தான்.

வாங்கவில்லே. உங்ககிட்ட" அவர் தயங்கினர்.

5

"ஐயா, என் நிலைமை உங்களுக்குத் தெரியும்! வரவுக்கும் செலவுக்கும் சரியாயிருக்கு!, உங்கள் கஷ்டத்துக்கு இல்லாததா? என் மோதிரத்தையே தருகிறேன்; செய்து ஒரு மாசம் கூட இருக்காது! செலவுக்குப் பத்து ரூபாயும் தருகிறேன், வைத்து எப்படியாவது சமாளித்து விடுங்கள்! தைப்பிறந்து அறுவடையானதும் கடிகாரம் வாங்கி அனுப்புவதாகச் சொல்லுங்க; கோபப்பட்டார்னா நான் சமாதானம் பண்ணுறேன்!"

"இந்த நன்றியை என்னும் மறக்கமாட்டேன் ஸார்!

தைப்பிறந்ததும் இதே ஏடையில் மோதிரம் வாங்கித்தந்திடுறேன், பணத்தையும் தந்திடுறேன்" என்றார்.

மோதிரத்தையும் ரூபாயையும் கொடுத்து அவரை அனுப்பிவிட்டு நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். சாமுவேல் நாடாரையும் அவர் நிலையையும் எண்ணியது என் உள்ளம்!

அவருக்குக் குளோரி ஒரே மகள்! நல்ல அழகி, எஸ். எஸ். எல்.ஸி. வரை படித்தவள். சாமுவேல் நாடாருக்குச் சொந்தமாகக் கொஞ்சம் நிலபுலங்கள் உண்டு. அதனை வைத்துத் தான் கடன் இல்லாமல் குடும்பத்தை நடத்தி வந்தார்.

குளோரிக்கும் வயதாகிவிடவே, பலஇடங்களில் வரனுக்கு அலைந்தார். கடைசியில் நாசரேத் ஹைஸ்கூலில் ஆசிரியராகயிருக்கும் ஒரு பிள்ளையாண்டானுக்கும் குளோரிக்கும் இங்கு வைத்துத்தான் திருமணம் நடந்தது. நானும் என் மனைவி ராணியும் கூட கலியாணத்துக்குப் போயிருந்தோம்

ரவி & கோ.,

(ரிஜிஸ்டர் நெ. 116)

உடுமலைப்பேட்டை P. O.

(கோவை ஜில்லா)

●

மாத தவணைகள் மூலம், ஜமுக்காளம் வினியோகம் செய்ய கண்யமான ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன் தரப்படும்.

15 nP. ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

மாப்பிள்ளை பீற்றர் இருக்கிறானே, அவன் ஆள் ஆஜானுபாகவாகத்தான் இருந்தான். ஆனால் முரட்டுக் குணமுள்ளவன் என்றுதான் பேசிக்கொண்டனர். இது நடந்து எட்டு மாதங்களாகி விட்டன. முதலாவது கிறிஸ்மசுக்கு மாப்பிள்ளைக்கு மோதிரமும் ரிஸ்ட் வாட்சும் வாங்கிப்போடுவதாகச் சாமுவேல் நாடார் சொல்லியிருந்தாராம்.

இந்த எட்டு மாதங்களில், மறுவீட்டுக்கு வந்து விட்டுப் போனபிறகு பீற்றரும் குளோரியும் ஒருமுறை கூட இங்கே வரவில்லை! உடன் குடிக்கும் நாசரேத்துக்கும் தொள்ளாயிரம் மைல் தூரமா?

"என்ன எழுத்தாளரே, வெந்நீர் ஆறிப்போகிறது; குளிக்க வராமல் என்ன சிந்தனை?" என்றாள் ராணி. எழுந்துக் குளிப்பதற்குச் சென்றேன்.

கிறிஸ்மசுக்கு இன்னும் மூன்று நாட்கள்தானிருந்தன. "அப்பா, பட்டாசு நெறையா வாங்கிட்டு வாங்கப்பா!" என்றான் என் திருக்குமாரன் தமிழரசன். எங்கள் வீட்டுக்கு வேண்டிய கிறிஸ்மஸ் சாமான்கள், துணிகள் எல்லாம் வாங்கிக் கொண்டுவந்தேன். ராணி சாமர்த்திய சாலியாக இருக்கப்போய்த்தான் ஆசிரியர் வேலையில் எனக்குக் கிடைக்கும் சம்பளத்தைச்கொண்டு சிக்கனமாகக் குடும்பம் நடத்திவந்தாள்.

எங்கள் வீட்டைப்பிரமாதமாக அலங்காரம் செய்திருந்தாள் ராணி. சாமுவேல் நாடாரும் அவர்கள் வீட்டை அழகுபடுத்துவதில் முனைந்தார். நாளைக்குக் கிறிஸ்மஸ்! புண்ணியமூர்த்தி, உலகத்தின் பாவங்களைப்போக்கப் பிறந்த பரிசுத்த ஏசுவின் அவதார தினம்! வெளிவராந்தாவில் ஈஸிசேரியில் அமர்ந்தபடி அடுத்த வீட்டை நோக்கிக்கொண்டிருந்தேன்.

சாயங்காலம்பீற்றரும்,குளோரியும் வந்துவிடுவார்கள். நாளை கிறிஸ்து ஜயந்தி அவர்கள் வீட்டில் மனோரம்யமாக இருக்கும்! பாவம், சாமுவேல் நாடார்! தன்மருமகனுக்காகப் பரிந்து பரிந்து ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்! பெண்ணைப் பெற்றுவிட்டால் பெற்றவர்களுக்குத் துன்பமும்கூட வே பிறந்துவிடுகிறது. அவர்கள் புக்ககம்போன பிறகு கூட, பிடுங்கல்கள் அதிகரிக்கத்தான் செய்கின்றன.

மாலைநேரம் பஜாருக்குப் போய்விட்டு விளக்குவைத்த பின் வீட்டுக்கு வந்தேன். ராணி "அடுத்த வீட்டில் மாப்பிள்ளையும் பெண்ணும் வந்திருக்காங்க!" என்றாள். என் உள்ளம் உவகையால் விரிந்தது.

இச்சமயம் குளோரி எங்கள் வீட்டுக்கு வந்தாள். "வாம்மா, இரு!" என்று உபசரித்தாள் ராணி.

"வேலையிருக்கக்கா; போகணும்.நீங்கள் பலகாரமெல்லாம் தயாரித்து முடிந்ததும் எங்கள் விட்டுக்குவாங்க! கிறிஸ்மஸ்

அமெரிக்கா சட்ட சபைக் கூட இந்தக் கட்டிடம் கட்டப்பட்டது; 131 ஏக்க பரப்புள்ள ஒரு பூங்காவின் மத்தியில் இந்த எடுப்பானக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.

பாட்டுபாடுவோம்" என்ருள். என் மனையும் 'சரி' என்ருள்.

ராணி பக்ஷணங்கள் தயாரித்து முடிக்க இரவு பன்னிரண்டு மணியாகிவிட்டது. அதுவரை நான் தூங்காது 'புஷ்பக் கூடை' என்ற நாவலை வாசித்துக்கொண்டிருந்தேன்.

"முதல் மணியடித்ததும் வந்து விடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு ராணி அடுத்த வீட்டுக்குப் போய்விட்டாள். அவள் போன சிறிது நேரத்தில் அடுத்த வீட்டிலிருந்து மதுரமான கிறிஸ்மஸ் கீதங்கள் எழுந்தன. அந்தப் பாடல்களின் இனிமையில் கட்டுப்பட்டு மெய்மறந்துபோனேன் நான்!

ஆலயத்தில் முதல்மணி அடித்தது: வாண ஓசைகள் வானைப்பிளந்தன. வீடுகளி-

லெல்லாம் பட்டாசு சுடும்ஓசை! மனோகரமான கிறிஸ்மஸ் பாடல்கள்!

கோயிலில் ஆராதனை முடிய நன்றாய் விடிந்து விட்டது. ஊரிலெல்லாம் கிறிஸ்மஸ் கோலாகலம்! எங்கும் குதூகலம் பொங்கி வழிந்தது. ராணி பலகாரங்களை என்முன் கொண்டு வந்து வைத்தாள். நானும் தமிழரசனும் அவற்றைப் பதம் பார்க்கத் தொடங்கினோம்.

திடீரென்று அடுத்த வீட்டிலிருந்து பேரிரைச்சல் எழுந்தது; என் இருதயம் ஏனோ காரணமின்றிக் கலங்கியது. பலகாரத்தை அப்படியே போட்டு விட்டு அடுத்த வீட்டுக்கு ஓடினேன்.

“நீங்கள்தான் பொறுத்துக் கொள்ளவேண்டும்: தைப்பிறந்ததும் கடிகாரம் வாங்கித் தந்துடுறேன்!” என்று கெஞ்சினார் நாடார்.

“அதெல்லாம் முடியாது! என்னை இப்படி அவமானப் படுத்தணும்னு எத்தனை நாளா காத்திருந்தீங்க? உங்களுக்கும் எனக்கும் சரிப்பட்டு வராது! நான் இப்பவே ஊருக்குப்புறப் படுறேன். உங்க பெண்ணை நீங்களே வச்சிக்கட்டிஅழுங்க!” என்று கடூரமாகக் கூறினான் பீற்றர்.

“அப்படிச் சொல்லக்கூடாது மருமகனே, எங்கள் நிலைமை தெரியாமல் பேசுறீங்க!” என்று ஏதோ பேச வாயெடுத்தாள் குளோரியின் தாயார்.

மணம், குணம் ஒருங்கே அமைந்த

மரகதம்

காபியை

உபயோகியுங்கள்

மொத்தமாயும், சில்லரையாயும் கிடைக்கும்
அன்றாடம் வறுத்து அரைத்து கொடுக்கப்படும்

K. ராமசாமி உடையார்,

பூரண உரிமையாளர்,

மரகதம் காபி ஒர்க்ஸ்

கரூர்.

“நான் தெரியாமல் பேசுறேன்; நீயும் உன் புருஷனும் தெரிஞ்சி பேசுறீங்க! சீ! அயோக்கிய நாய்கள்” என்று கத்தினான் பீற்றர்.

“பீற்றர், மரியாதையாகப் பேசு! உனக்கு எங்க பெண்ணை தந்திருக்கிறோமென்பதாலே, நீ வாயில்வந்தபடியெல்லாம் பேசிவிடலாமென்று நினைக்காதே!” என்று குமுறினார் சாமுவேல்.

“உன்பெண்ணை நீயே கட்டிக்கொள், நான் வருகிறேன்!” என்று சீறியபடி குளோரியின் மேல் பாய்ந்தான் பீற்றர். மறுகணம் அவள் கழுத்தில் கிடந்த தாலியை அறுத்துக்கையிலே எடுத்துக்கொண்டான்.

17 வயதுடைய ஜான் தாமஸ், "உயர் குதிப்புப் போட்டியில் ஒருதனி உலக ரிக்கார்ட் ஏற்படுத்தினார். உயரம் 6' 4½" ஆகும்.

"ஐயோ, அம்மா!" என்று அலறினாள் குளோரி. எனக்கு வந்த ஆத்திரத்துக்கு அளவே இல்லை. அவனைத் தரையிலே தூக்கிப்போட்டு நாலு மிதி மிதிக்கலாமா என்று கூடத் தோன்றிற்று.

"பீற்றர், நீ படித்தும் முட்டாள்! நன்றாக யோசித்துப் பார்; நீ செய்தது சரிதானா?" என்றேன் நான்.

"இது என் சொந்த விஷயம்! இதிலே அநாவசியமான நாய்கள் எல்லாம் தலையிடவேண்டாம் இன்று முதல் இவள் என் மனைவியுமல்ல; நான் இவள் புருஷனுமல்ல!" என்று நாய்

போல் கத்திக்கொண்டு, தன் கைப்பெட்டியுடன் 'விறுவிறு' வென்று வெளியே நடந்தான் பீற்றர்.

கண்களில் பெருகும் கண்ணீருடன் அவன் போவதையே வெறிக்கப்பார்த்தாள் குளோரி. சாமுவேல் நாடார் சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டார்!

ஐயோ! என்று அலறிக் கீழே விழுந்தாள், குளோரின் தாயார். "என் மகள் கணவன் இருந்தும் விதைவையாகி விட்டாளா, பாழும் வரதட்ஷணை என்று ஒழியுமோ?" என்று இரண்டு வார்த்தைகளை அவள் முணு முணுத்தாள்; சிறிது நேரத்தில் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.

பொன்மொழி

நற்செயலில் ஈடுபடுகிறவன் மரியாதைக்கும், தீச் செயலில் ஈடுபடுகிறவன் பரிதாபத்திற்கும் உரியவனாகிறான்.

—காந்திஜீ.

தொழில்

(INDUSTRY)

(தமிழ் மாத மிருமுறை)

போன் : 31738. தந்தி : மெரிகோல்ட்

விளம்பர விகிதம்

★

கடைசி மேல் அட்டை 3 கலர்	...	175	0	0
,, 2 கலர்	...	125	0	0
,, கலர் இல்லாமல்	...	100	0	0
,, உள் பக்கம்	...	75	0	0
உள் பக்கம் 1 பக்கம்	...	50	0	0
,, ½ பக்கம்	...	30	0	0
,, ¼ பக்கம்	...	20	0	0

குறிப்பு:—ஆறு மாதத்துக்கு மேல் காண்ட்ராக் விளம்பரம் தருபவர்களுக்கு கட்டணச் சலுகைகள் உண்டு.



அணுவைப் பிளக்கும் மாபெரும் யந்திரம்

இல்லினுயிலுள்ள ஆர்கான் தேசிய ஆய்வுக்கூடத்தில் புதிதாக அணுப் பிளப்புக் கருவி ஒன்றை அமைப்பதற்கு மண்தோண்டும் வேலை ஆரம்பமாயிற்று. அமெரிக்க அரசாங்க அதிகாரிகளும் விஞ்ஞானிகளும் விழாவில் கலந்து கொண்டனர்.

புதியஅணுப்பிளப்பு யந்திரத்துக்கு 290 லட்சம் டாலர் செலவாகும். யந்திரத்தின் அமைப்பு ஒரு வளையம் போன்று இருக்கும். அது 12,500 மில்லியன் எலக்ட்ரான் வோல்ட் சக்தி உடையதாக இருக்கும்.

புதுக் கருவியின் பயன் இரு வகைப்படும்: (1) அணுவினுள் உள்ள அநேக வகையான துகள்களை உற்பத்தி செய்தல். (2) அந்தத்துகள்களின் அடிப்படைத்தன்மைகளை ஆராய்வதற்கு ஒரு கருவியாய் அமைதல்.

புரோட்டான் என்னும் அணுத்துகள் மிக்க வேகமாகச் சென்று அணுக்களைத் தாக்கிப் பிளக்குமாறு, புதுக் கருவி புரோட்டான்களுக்கு வேகமூட்டும். "ஸீரோ இரேடியன் சிங்ரோட்ரான்" என்பது இந்த மாபெரும் யந்திரத்தின் பெயர்.

தச்சர் கருமான்களின் தொழில் பயிற்சி

தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டையில் தச்சர்கள், கருமான்களுக்கான கைத் தொழில் கூட்டுறவை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் அனுமதித்துள்ளது. இத்திட்டத்துக்கு நிலம், கட்டிடங்கள், யந்திரங்கள், ஆகிய முதலீட்டுச்செலவு வகையில் ரூ. 39,000ம், 3 மாத கால கச்சா பொருள் ஊழியர்கள், சம்பளம் முதலிய நடைமுதல் செலவு வகையில் ரூ. 30,000 நடைமுதல் மூலதனமும் தேவைப்படும். சொசைட்டி தனது உறுப்பினர்களிடமிருந்து ரூ. 13,000 பங்கு மூலதனம் வசூலிக்கும். சொசைட்டிக்கு அரசாங்கம் ரூ. 56,000 கடன் அனுமதித்துள்ளது. மேற்பார்வை ஊழியர்களை அமர்த்திக் கொள்வதற்கும் சொசைட்டிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவை மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் 50:50 என்ற விகிதத்தில் ஏற்கும்.

நடிகை நந்தினி

"மாமல்லன்"

[ஏகாங்கியாக திரிந்துகொண்டிருந்த நந்தினிக்கு நாடகத்தில் நடிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அந்த நாடகத்திற்கு தலைமை வகிக்க வந்திருந்த கோடீசுவரரான சர். ராமசாமி அவளின் பேரழகைக் கண்டு மையலுருகிறார்... தனக்குச் சொந்தமான சந்திரிகா தியேட்டரில், ஒப்பந்தம் செய்திருக்கும் நாடகத்தில் நந்தினியை நடிகையாக தேர்ந்தெடுக்கிறார். அதற்கு முட்டுக்கட்டையாக கதாசிரியர் சாந்தலிங்கமும், நடிகன் பாஸ்கரும் நிற்கின்றனர்... ராமசாமியின் நிதான சுபாவத்தாலும், ஸ்திரபுத்தியாலும், நந்தினியை நாடகத்திற்கு ஒப்பந்தம் செய்து விடுகிறார். இடையில், சிலோனிக்லாட்ஜ் வேலைக்காரன் ரத்னமும், நடிகன் சங்கரும், தலையிடுகின்றனர், நந்தினியை காதலிக்க, நடப்பதை மேலே கவனியுங்கள்...]

என்றும், எந்த சூழ்நிலையிலும், சாந்தம், நிதானம், ஆழ்ந்த சிந்தனையோடு எடுத்தக்காரியங்களை செவ்வனே செய்யும் இயல்புடைய சர். ராமசாமி. ஒத்திகை நடக்கும் போது, இம்மூவரிடையே தகராறுகள் ஏற்படுமென்று யூகித்தார். இம்மாதிரியான சிக்கலான சூழ்நிலை இதற்கு முன் இவருக்கு என்றும் ஏற்பட்டதில்லையெனலாம். முதலாளிகள் கதாசிரியர்கள், நடிகர், நடிகைகளிடம் சிக்கி, அவர்கள் ஆட்டிவைக்கிறபடியெல்லாம், தஞ்சாவூர் பொம்மைகள் போல் ஆடி, உன்மத்தர்களாகி விடுவார்கள். கதாசிரியர்கள் வெகுண்டு எல்லோர் மீதிலும் சீறிவிழுவார்கள். நடிகைகளோ அழுத கண்ணீரும் சிந்தியகையுமாகயிருப்பார்கள். இதனிடையேசில்லரை தேவதைகளோ வென்றால், ஊர்இரண்டுபட்டால் கூத்தாடிகளுக்குக் கொண்டாட்டமென்பார்களே, அம்மாதிரியான சில்லரை சேஷ்டைகள் செய்து, தொழிலாளி முதலாளிகளுக்கிடையே பூசல்களை உண்டு பண்ணி, பணத்தை கரைக்க முற்படுவார்கள்.

சர். ராமசாமி தாமரை இதழ் மீதுள்ள தண்ணீர்போல் தவிக்கலானார். இம்மூவர்களிடம் சிக்கிக்கொண்டு. அவரால் ஏகாந்தமாக அங்குயிருக்க இருப்புக்கொள்ளவில்லை, அவர் மூளைக்குழம்பியிருந்தது. மெதுவாக எழுந்து, கம்பெனி ஆட்கள் வேலை செய்யுமிடத்திற்கு சென்றார். தியேட்டர் மேனேஜர் ராதா தச்சர்களை வேலை வாங்கிக் கொண்டிருந்தார்.

6

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

பாஸ்கர் இருக்கரங்களையும் தூணின் மீதுவைத்துக்கொண்டு படுத்தபடி கைகுட்டையால் வியர்வைத்துடைத்து கொண்டிருந்தான். சாந்தலிங்கம், இருகைகளையும் மின்னுக்கும், பின்னுக்கும், ஆட்டிக் கொண்டிருந்தார். சர். ராமசாமி இவர்களை கவனியாததுபோல், மேடைமீது முகத்தை இருக்கைகளாலும் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த நந்தினியிடம் வந்தார்.

அவள் கேசம் கலைந்து, தலை விரிகோலமாய், முகத்தை மூடியிருந்தது. அவளைப்பார்ப்பதற்கு பயங்கரமாயிருந்தது. அவள், அவரைப்பார்த்த பார்வை கனல் கக்குவதாகயிருந்தது. அவருக்கு ஒன்றும் புரியவில்லை. இதோடு ஒத்திகை, நான்காவது தடவையாக, சீரழிந்திருக்கிறது. அவரென்ன செய்யமுடியும், அந்த ஏந்திழையாளிடம். மெதுவாக சென்று அவள்தோளின்மீது வலது கையை வைத்து கண்ணே கலங்காதே, ஏன் கலக்கம், சீமாட்டிக்கு கலக்கம் உண்டாகலாமா, நக்ஷத்திரமாக விளங்க வேண்டுமானால் இம்மாதிரியான சிறுகஷ்டங்கள் இருந்தே தான் தீரும் ...ம்.... ம்...ஆகட்டும்...காலத்தை வீணாக்காதே ரசிகர்கள் உன்னை மேடையிலே எதிர்பார்க்கிறார்கள், நம் நாடகத்தில்...கலங்காதே... தீஞ் சுவைத்தேனே...கலங்காதே... கண்ணே என்றார்.

குனிந்த தலை நிமிராமல் விக்கி...விக்கி...அழுதுகொண்டே, முடியவே முடியாது... என்னை விட்டு விடுங்கள். நம் உறவு இன்றோடு தீண்டிக் கட்டும்...ரவியிேனாடு... ஒத்திகை வேண்டவே வேண்டாம்... என் கண்ணே ...தீஞ்சுவைக் கரும்பே...என்று, என்னைக்கட்டியணைக்க வருகிறான், அந்த பாவி...இதைவிட வேறு என்ன வேண்டும்...எனக்கு என்றாள், நந்தினி.

பாஸ்கரன், கைகுட்டையால் முகத்தை துடைத்தபடி அங்கு வந்து என்னம்மா கை படாமல் நடிக்கமுடியுமா! நீ என்ன கை படாத ரோஜாவா! நாடக பாத்திரத்தில் அணைப்பு, முத்தம், உதை, குத்து, ஊடல், எக்களிப்பு, எல்லாம்தான் நடக்கும் அப்படின்னா நீ நடிக்கவே வந்திருக்கக் கூடாது, என்றான். அதற்குள் சர். ராமசாமி குருக்கிட்டு, சரி சரி நிறுத்து உன்பிரசங்கத்தை, பெண்களிடம் மரியாதைக்குறைவாகப் பேசாதே. அவள் மனதை புண் படுத்தாதே என்றார். தங்களுக்கு

ஏன் தெரியப்போகிறது, எங்களின் இரத்தத்தை உறிந்து, எங்கள் உயிரையே குடித்து விட்டாள், எங்களால் ஆனமட்டும் அவளுக்கு, ஒத்திகை செய்துக் காட்டினோம். எல்லாம் விழலுக்கு இரைத்த நீராய், உருபடுவதாய் தெரியவில்லை அவள் எங்களின் உயிரை வாங்கினது தான் மிச்சம், பாராங்கல்லில் தலையை மோதிக் கொண்டிருந்தாலும், அதுவாகிலும் எங்கள் மீது இரக்கம் காட்டி அசைந்திருக்கும் இவளா இருதயமில்லா பேய், பேயிக்குத் தகுந்த குட்டிச் சாத்தானை காதலனாக போட்டோம் ம்ம்...அவனையும் துரத்துகிருள் நாயைப்போல, சேசே இது நடக்காத காரியம் என்ருன், பாஸ்கர்.

ஐய்யய்யோ, என்னை விட்டு விடுங்கள் எனத்தன் இருக்கைகளையும் தலைமேல் மோதி அடித்துக் கொண்டாள்; அவள், அவர்களைப் பார்த்த பார்வை பாண்டியனை எதிர்த்து சீறி நின்று, கோவலன், கள்வனல்ல, நீதி அநியாய மிழைத்து விட்டது, என்று அறைகூவல் விடுத்த கண்ணகியின் சொரூபமாக இருந்தது. அவளின் பார்வை என்றுதான் கூற முடியும், அப்படி யிருந்தது, அவளின் பார்வை. ராமசாமி என்ன செய்வார், பாவம் அவளைப்பார்க்க சகிக்கவில்லை, அவருக்கு. கண்ணே என்ருர் கொஞ்சும் தொனியில், கண்ணும் வேண்டாம், பொண்ணும் வேண்டாம் நான் போகிறேன் என்ருள், நந்தினி. பொருமைக்கும் எல்லையுண்டல்லவா. பொருமையை மீறினர் சர் ராமசாமி. பாஸ்கர், சாந்தலிங்கம் எங்கே? கூப்பிடு அவரை என்ருர். அதுசமயம், மானேஜர் ராதா அங்குவந்து மணி எட்டாகிறதுங்களே என்ருன். ஆம் நாம் போகும் சமயம் தான் என்று பாஸ்கர் ஊமை சைகை செய்தான். இன்றைய இரவு என்னேரமானாலும் இந்த ஒத்திகை நடந்தேதத் தீரவேண்டும். என் பணம்கரியானது தான் மிச்சம். ம்ம் ஆகட்டும் நான் பார்த்துவிடுகிறேன், என்ருர் சர். ராமசாமி, அழுத்தம் திருத்தமாக.

சாந்தலிங்கம், வழுக்கைத் தலையை தன் இடது கையால் தடவியபடி...ம்ம் இன்னும் ஒரு வாரத்திலும் முடித்துவிடலாம். ஆனல் இவள் நடிகையல்ல. பேய்! இவளோடு மாரடிக்க நம்மாலாகாது. வேறு நடிகையைத் தேடினல் தான் நாடகம் சீக்கிரம் நடக்கும், இல்லையானல்! ஊர்மிளாவானல் ஒத்திகையேத் தேவையில்லை, பெண்ணழகி, நடிப்பில் கெட்டிக்காரி, நடிப்பில் இவள் அவளிடம் பிச்சை வாங்க வேண்டும் ம்ம் நல்ல வசூலும் ஆகும் என்ருர்.

ஆமாங்க, அவள் உணர்ச்சியுடையவள், காதல், சோகம், ஊடல், கோபம், பயங்கரம், தத்ரூபவசனம், ஆகிய கட்டங்களில் அனுபவத்தோடு, பார்ப்பவர்கள் பிரமிக்கும்வண்ணம் நடிப்பவள், ஏன் அழகிலும் தங்க விக்ரகம். அனுபவத்தை ஒட்டி நடிப்பவர்களின் நடிப்பு தான் பிரமாதமாகயிருக்கும். நந்தினியோ, கசங்காதமலர், நாசுக்காக நடிப்பவள் ம்...ம்...

P. H. முகமது நஸீருத்தீன்

★

டால்மியா சிமென்ட் ஸ்டாக்கிஸ்ட்

GI பைப் & பைப்

பிட்டிங்ஸ் வியாபாரம்,

இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்

★

பாலக்கரை ரோடு, திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456

போன் : 786

தந்தி : HARDWARE

★

குறிப்பு:—

1/157, தஞ்சை ரோடு (அரிய மங்கலம் ஹமீதியா ரைஸ் மில் எதிரில்) சப் டிப்போவிலும் சிமெண்ட் டிலவரி செய்கிறோம்.

இந்த காலத்துக்கு உதவமாட்டாள். காதல் ஊடல் செய்தவள் குழந்தைகள் ஈன்றவளாக வாராகயிருந்தாலும், என் ஜோடியாக சேருங்கள், நான் அவளை ஒரு சிறந்த நடிகையாக, நக்ஷத்திரமாக தயார் செய்துவிடுகிறேன், என்றான் நடிகன் பாஸ்கர்.

பாஸ்கரன் உடக்கார க்கூட சௌகர்யப்படாமல் திரண்ட தோள்கள் சோர்ந்து சுவற்றில் சாய்ந்தபடியிருந்ததை கவனித்தார், சர். ராமசாமி. அவரின் மனமும் சோர்ந்து விட்டது. நந்தினி, காதல் கட்டத்திற்கும் சோககட்டத்திற்கும், அதிலும் சாந்தலிங்கம் தீட்டிய கதைக்கு உகந்தவளாக இருப்பாளா, பாஸ்கரன் சொல்வதுசரிதானே முன் நடித்த நாடகங்களில் சிறப்பாக நடித்துள்ளாளே !:... ம்...எதுவானாலும் சரி அவள் அந்நாடகத்தில் நடித்தேதான் தீரவேண்டும் என எண்ணியபடி, ஆம் நான் அவளைக் காதலிக்கிறேன், என் மனைவியாக ஏற்றுக்கொள்ளத்தான் போகிறேன் என்றார். பித்தம் தலைக்கேறியவன், பிதற்றுவதுபோல்

ஏதோ பேசவாயெடுத்த சாந்தலிங்கம், புன்னகையோடு கூடிய சர். ராமசாமியின் பார்வை அவரை ஈர்த்தது. என்ன ராமசாமி நம்மை தீனிக் கிழுத்து வீண்பரிகாசம் செய்கிறார்போலும்...என யூகித்து நான் நினைக்கிறேன், ஊர்மிளாவுக்கு தந்தியடித்து வரவழைக்கலாம் ...என்ன சொல்கிறீர் என்றார்.

இதனை செவியுற்ற நந்தினி, கதிகலங்கிபோனாள். தேடிவந்த

செல்வம் விஞடியில் பறந்து போகும் நிலைவந்து விடுமோ வென, மின்வேகத்தில், சர். ராமசாமியின் இருகரங்களையும் பற்றி அன்பரே, நான் இனி இம்மாதிரி சுணக்கம் செய்ய மாட்டேன், ஒத்திகை சரிவர செய்கிறேன் என சொல்லி கண்ணீர் விடுத்தாள். ராமசாமி பூரிப்படைந்தார். சரி கண்ணே அப்படியே ஆகட்டும் என்று சொல்லி அவள் முதுகில் தட்டிக்கொடுத்துவிட்டு, சாந்தலிங்கத்தோடு ஆபீஸ் அறைக்கு சென்றுவிட்டார்.

பாஸ்கர் அவளை யணுகி, இன்னும் தலைவேதனையா, என அதட்டிய குரலில், என்ன குழந்தை காதல் கீதம்பாடுவாயா சோககீதம் பாடுவாயா, நீ விரும்பாத காதலனோடு அது நடக்கக் கூடிய காரியமா, அவன் உன்னைக் காதலிப்பதாக காதல் கீதம்பாடி... கட்டியணைத்து முத்துமாரி பொழிய நேரிடுமே ஆகட்டும் பார்க்கலாம், விக்ரமாதித்தன் கதையில் சொல்வார்களே, வேதாளம் மறுபடியும் முருங்கமர மேறியதென்று,

அம்மாதிரியாகத்தான் உன் கதையும் முடியுமென்றுன். இவையனைத்தையும் கவனித்திருந்த ரவி, இம்மாதிரியான நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாதென நந்தினியின், அருகில் சென்று, கண்ணே, என் தீஞ்சுவைக்கனியே, கட்டிக் கரும்பே என் அருகில் வா...எனக்கொரு முத்தம் உன் செவ்விதழ்களால் என்றுச் சொல்லிக்கொண்டே அவளைக் கட்டியணைக்கத் தாவினன்.

அவளுக்கு கோபம் கனல் கக்க டே பேய்பசங்களா தொலையுங்கள், சோமாரி பசங்களோடெ நடிப்பதை விட்ட.... என்று சொல்லியபடி தியேட்டர் ஹாலை விட்டு வெளியேறினுள், நந்தினி.

(திரை)

செம்பு, பித்தளை சாமான்களின் உற்பத்தி

கழிவுகளிலிருந்து செம்பு, பித்தளை தட்டுகள் தயாரிப்பதற்காக திருச்சியில் கைத்தொழில் கூட்டுறவு சொசைட்டி ஒன்றை ஏற்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் அனுமதித்துள்ளது. இந்த திட்டத்துக்கு நிலம், கட்டிடம், யந்திரங்கள் ஆகிய மூலதனச்செலவு செலவு வகையில் ரூ. 2 லட்சமும், 3 மாதத்துக்கான கச்சா பொருள்கள், தொழிலாளர் சம்பளம் முதலிய வகையில் ரூ. 2, 70, 000 நடை முதல் மூலதனமும் தேவைப்படும். சொசைட்டி தனது உறுப்பினர்களிடமிருந்து ரூ. 47, 000 பங்கு மூலதனம் வசூலிக்கும். அரசாங்கம் ரூ. 2½ சத விகித வட்டியில் ரூ. 4. 23 லட்சம் கடன் அனுமதித்துள்ளது. 10 சம வருஷாந்திர தவணைகளில் இதைத் திருப்பிச் செலுத்த வேண்டும். சொசைட்டி அமர்த்திக் கொள்ளும் மேற்பார்வை ஊழியர்களுக்கான செலவில், அதாவது ஒரு சூப்பிரண்ட், 2 போர்மன்களுக்கு ஆகும். செலவை மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் 50: 50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

தமிழ் நாட்டின் சிறு தொழில் வளம்

[திருமதி. மனோன்மணி சுவாமிநாதன், பி. ஏ.]

தமிழ் நாட்டின் சிறுதொழில்கள் பற்றி பேசப்படும் நாள் இது. மாநிலச் சிறுதொழில் கழகம், மாநிலச் சிறுதொழில் தொண்டுக்கழகம், முதலியன நிறுவப்பட்டுள்ளன. முன்னேற்றத்திற்கு தொழில் துறையில் முனைந்திருக்கிறோம் நாம். சிறுதொழில், தொழிலின் அளவிலே சிறியதேயொழிய சிறப்பால் சாலப்பெரிது என்று பாரதநாடு, சிறப்பாக தமிழ்நாடு அறிந்துள்ள நாள்; "சிறியோரெல்லாம் சிறியரு மல்லர்" என்ற உண்மை தொழில் துறையிலும் பொருந்தும் நாள் இது.

சிறுதொழில்களை அரசியலார் பின்வருமாறு வரையறுக்கின்றனர். குடிசைத் தொழிலினின்றும் இதை பிரித்துப் பேசும் அளவில், ஐம்பதுக்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு, ஐந்து இலட்ச ரூபாய் முதலுக்கு மிகாது இயங்கும் தொழில்கள் எல்லாம் சிறுதொழில்களே. இந்தத் தொழில்களின் வளத்தை வளர்க்கவே இன்று அரசியலார் தனிச்சங்கங்கள் ஏற்படுத்தியுள்ளனர். இத்தொழில்களை வளர்ப்பதற்கு கடன் கொடுத்து உதவுகின்றனர். தொழிற் கூடங்கள் ஏற்படுத்தி, அவற்றிற்கு மின்சாரம், இயந்திர உதவிகள் அளித்து அவைகளைத் தொழில் ஆர்வமுள்ள மக்கள், தவணை முறையில் வாங்கி 20 (இருபது) ஆண்டுகளில் உரிமையாக்கிக்கொள்ள வசதி செய்துள்ளது அரசாங்கம். தொழிற் பணிக் கூடங்கள் சிலவும் நிறுவப்பட்டுள்ளன; சென்னையில் ஒற்றைவாடைச் சாலையில் நிறுவப்பட்டுள்ள 'பிரஸ்டு மெட்டல்' (Pressed Metal) தொழிற் பள்ளிக்கூடம் இதில் முதன்மையானது. இதை யடுத்துப் பூட்டு வேலைகளுக்கு பணிக்கூடமும், தோல் வேலைக்குப் பணிக்கூடமும் போன்ற சில ஏற்படுத்தப்படுவதாக உள்ளன. இத்துடன் சிறுதொழில்வளம் பெருக்க மத்திய சர்க்காரின் விற்பனை கழகம் ஒன்று சென்னையில் இயங்குகிறது. சிறுதொழில்களின் உற்பத்திப் பொருட்கள் பெரும்பாலானவற்றை விற்க வழி செய்து கொடுப்பதும், புதுச்சிறுதொழில்கள் இயங்க விற்பனை வட்டாரங்கள் ஏற்படுத்திக் கொடுப்பதும் இதன் பணிகள். இதை ஒட்டி ஓர் உண்மையைத் தொழில் துறை மக்கள் அறிந்துள்ளனர். தொழில் துவங்குவதற்கு அடிப்

படையாக, அத்தொழிலால் உற்பத்தியாக்கப்படும் பொருட்களுக்கு விற்பனை இடங்கள் முக்கியமாக வேண்டியது. அத்தொழிலில் முன்னமே வல்லமை பெற்று இயங்கிவரும் தொழிற்சாலைகளுடன் புதுத் தொழில்களுக்கு வந்து சேரும் தொழிற்போட்டியும் இதில் மிகவும் சிந்திக்க வேண்டியவையாகும். தொழில் தொடங்கி விற்பனைக்கு வழி தெரியாமல் சிதைந்த தொழிற்சாலைகள் பல. சிறு தொழிற்சாலைகளில் இதன் முக்கியம் நன்கு உணரப்படவேண்டும்.

அடுத்துச் சிறு தொழில்களின் சிறப்பினைச்சிறிது பார்க்கலாம். தொழில் வளமிக்க நாடுகளாம் அமெரிக்கா, இங்கிலாந்து இரஷ்யா, முதலான நாடுகளில் சிறுதொழில்களின் இடம் என்ன? சுருங்கக் கூறின் இங்கு சிறு தொழிற்சாலைகளே முக்கியம்வாய்ந்தது எனலாம். அமெரிக்காவில் இதன் முக்கியம் நாளுக்குநாள் பெருகிவருகிறது. அங்கெல்லாம் சிறுதொழிற் சாலைகளை அரசினர் நன்கு கண்காணித்து, அவை பெருந்தொழிற்சாலைகளின் போட்டியினுல் நலிவுரு வண்ணம் பாதுகாக்கின்றனர். இதை யொட்டி 1953ல் ஒருசட்டம் இயற்றியுள்ளனர். அதன்படி சிறு தொழில்களுக்கு உதவி முன்னேற்ற வழிகள், பாதுகாப்பு முதலியன அளிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை நடத்திக்கொடுக்கச் சிறு தொழில்கள் ஆட்சி என்ற ஓர் இயக்கத்தினை அரசியலாரே அங்குஏற்படுத்தியுள்ளனர். ஐரோப்பாவில் சிறு தொழில்களுக்கென ஆங்காங்கு ஆலோசனைப் பணிக்கூடங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் ஐரோப்பிய உற்பத்தி ஏஜென்ஸி மியூனிச்சில் ஒருமகாநாடு நடத்திச் சிறுதொழில்களின் முக்கியத்வத்தை நிலைநாட்டியது. இதன் ஆதரவில் சிலர் அமெரிக்கா சென்று சிறுதொழில்களை ஆராய்ந்தனர். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சிறுதொழில்கள், அமெரிக்காவில் அரசியலார் முன்னின்று தூக்கிவிட வேண்டிய அளவுக்கு நலிவுறுதற்கான காரணங்களை அறிந்தனர். அடிப்படையாக நிர்வாகத்திறமை சிறுதொழில் நிர்வாகிகள் இடையே சரிவர இல்லாமல்தான் தொழில் நலிவுக்கு காரணம் என்று கண்டனர். பெருந்தொழிற்சாலைகளின் நிர்வாகிகளைக் காட்டிலும் இவர்களிடையே பரந்த அறிவு வேண்டும். உற்பத்தி, விற்பனை, வரவு செலவு கணக்கிடுதல் இவை மூன்றினுள் ஒன்றில் வல்லமை குறையினும் சிறுதொழில் நலிவுறும். அமெரிக்கச் சிறுதொழில் நிர்வாகிகள், இம்மூன்று பணிகளில் ஒன்றையே சிறப்பாகக் கருதி, மற்றவற்றைப் பொருட்படுத்த மறந்து விடுவதுதான் அங்கு சிறுதொழில் நலிவுக்குக் காரணம் என்று கண்டனர்.

இதை நம் சிறுதொழில் அதிபர்கள் நன்கு உணரவேண்டும். விற்பனைக்கு வழி இல்லை என்றுல் உற்பத்தி எதற்கு? வருவாய் தரும் உற்பத்தி இல்லையானுல் உற்பத்தி எதற்கு? தொழிற்சாலை எதற்கு? இந்த வருவாயினை அளிக்க வரவு

செலவு உற்பத்திப் புள்ளி விவரங்கள் (Statistics) வேண்டுவனவாகும். நலிவுறும் சிறு தொழில்களுக்கு அமெரிக்காவில் அளிக்கும் உதவி பெரிது. உதாரணமாக, அங்குள்ள ஜெனரல் மோட்டார் கார்ப்பொரேஷன் இருபத்தாருயிரம் சிறு தொழிற்சாலைகளில் இருந்து சிறு பொருட்களையும், கருவிகளையும் பெறுகிறது. இவைகளைப் பாதுகாத்து தகுந்த இலாபம் அளிக்கவும்உறுதி அளித்துள்ளது. நம் நாட்டில் சிறப்பாகச் சென்னையில் இந்நிலை ஏற்படுவது அரிதே, அரசினர் அவ்வப்போது தரும் உதவியைத் தவிர தொழில் முறை திறம்பட நடந்தால் தொழில் சிறக்குமேயன்றி, பெருந்தொழில்களின்பொருள் தார உதவி கிடைப்பதற்கில்லை. மேலும், அமெரிக்காவில் நூற்றுக்கு எழுபது விழுக்காடு சிறு தொழிற்சாலைகள் ஒப்பந்தத் தொழில்களே செய்து வருகின்றன. எஞ்சிய முப்பது விழுக்காடு தொழிற்சாலைகளே வேறு தனித் தொழில்கள் செய்கின்றன. இத்தகைய ஒப்பந்தத் தொழில் நம் சிறு தொழில்களுக்குக் கிடைத்து. நிலைபெறவும், அதன்உற்பத்தியில்போட்டியினின்றும் சிறு தொழில்களை பாதுகாக்கவும் அரசினர் உதவவேண்டும். 'ஒரு தொழிலுக்குஒரே தொழிற்சாலை' என்ற சட்டம் இயற்றவேண்டும். தொழில்களின் எண்ணிக்கைக்குப் பஞ்சமே இல்லை.

முரளி ஸ்டோர்ஸ்

எவர்ஸில்வர், பித்தளை பாத்திர வியாபாரம்

67-16, ஸர் உஸ்மான் ரோடு,
பர்கிட் ரோடு,
(பஸ் ஸ்டாண்ட் எதிரில்)

தியாகராய நகர் சென்னை-17.

மலிவான விலையில் புதியதாகவும், மிக நேர்த்தியாகவும், உத்திரவாதமும் உள்ள

எவர்ஸில்வர், பித்தளைப் பாத்திரங்கள்

எங்களிடம் கிடைக்கும்

தயவு செய்து எங்கள் கடைக்கு வருகை தாருங்கள்! தவறாதீர்கள்!!

நூற்றுக்குள்ளான தொழிலாளர்களைக் கொண்டு அதற்கேற்பச் சிறிய அளவு முதலீட்டையும் கொண்டு இங்கிலாந்தில் நடைபெறும் தொழிற்சாலைகள் ஏறக்குறைய நாற்பத்திரண்டாயிரம். இவை மொத்தத்தில் 15, 55, 000 தொழிலாளர்களைக் கொண்டனவாகும். இதனின்றும் சராசரியாக 37 தொழிலாளர்களைக் கொண்டு நடைபெறுவன, இவை எனக் கணக்கிடலாம். இவற்றுள் 24 க் குட்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகள் சுமார் 16, 000 சிறிய முதலீட்டுடன் நடைபெறுகின்றன. நம்மால் பின்பற்ற வேண்டிய செயல் இது. அமெரிக்காவில் நிலவும் சிறு தொழிற்சாலைகள் 3, 11, 000.

தமிழ் நாட்டில் இத்தொழில் பலவற்றுக்கு நல்ல வருங்காலம் (Future) உண்டு. ஐந்தாண்டு திட்டங்களில் பொருளீடு விகிதம் சென்னைக்கு குறைவால் உள்ளதைப் பலரும் அறிவர். "தோல்களைப் பொறுத்தவரையில் பொருள் செலவிட்டுப் பெருந்தொழில்கள் துவக்குவதற்குத் தமிழ்நாடு இடங் கொடுக்கவில்லை; வளம் போதாது. பெருந்தொழில்களுக்கு வேணடிய நிலக்கரி, இரும்புக்கனிச்சேர்க்கை இங்கில்லை; கிடைக்கும் நிலக்கரியின் தரமும் குறைவு. இரும்புக் கனியும் அவ்வாறே! என்று விளக்கிப் பதிலளிக்கின்றனர். நாம் கேட்கவேண்டியதெல்லாம் இந்தப்பதியின் அடிப்படையிலேயே. பெருந்தொழில்களுக்கு சென்னை மாகாணத்தில் வளமில்லையாயின் வேண்டாம். சிறு தொழில்கள் வேண்டும். நூற்றுக்குக் குறைந்த தொழிலாளர்களை கொண்டு பிரிட்டனில் 42,000 தொழிற்சாலைகள் நடத்தப்படுகின்றன. அவற்றுள் இரும்பு நிறைந்த அளவில் தேவைப்படும் தொழில்களை நிறுத்திவையுங்கள். மற்றும் தமிழ்நாட்டின் பொருளாதார, தட்பவெப்ப நிலைக்கு ஒவ்வாது என்று தோன்றும் தொழில்களையும் ஒதுக்கி விடுங்கள். எஞ்சிய தொழில்களை ஆரம்பிக்க வழிசெய்யுங்கள் என்று தான் நாம் கேட்கவேண்டும். இதிலேயே பல நூறு தொழில்கள் அடங்கும். நாம் செய்ய வேண்டுவதெல்லாம் தொழிலில் இந்தவகைப்பட்ட தொழிலில் முன்னேறியுள்ள நாடுகளின் உதவிபெற்று அத்தொழில் முறைகளை அப்படியே பின்பற்ற வேண்டியது தான். சிறுதொழில்களை ஏற்படுத்துவதில் நாம் பிரிட்டனை பின்பற்றலாம். ஜப்பானைப் பின்பற்றலாம். நாமாக ஆராய்ந்து தொழில் வளம் பெருக்குவதென்பது விரைவிலும் எளிதிலும் முடியாததாகும். தொழில் துறையே இன்னதென்றறியாத சீன நாடு மூன்றே ஆண்டுகளில் பல நூறு தொழில்களைக்கொண்டு முன்னேறியதை நாம் அறிவோம். ஒரு பூகம்பத்தில் பல தொழிற்சாலைகள் மண்ணுக்குள் புதைந்தாலும், ஜப்பானுக்கு அவைகளை மீண்டும் நிலைநாட்ட ஒரிரு மாதங்களே போதும். ஜப்பானிய முறை இதில் மிகவும் மேலானது. பல ஆண்டுகள் முயன்று உலகில் மற்ற நாடுகள் சாதிக்

கும் தொழில் வளர்த்தினை ஜப்பான் அப்படியே பிரதிப்படுத்தி ஒரு ஆண்டிலே நடைமுறைக்குக் கொண்டு வந்துவிடும். அமெரிக்கர் பத்து ஆண்டுகள் முயன்று ஒரு இயந்திரமோ, கருவியோ கண்டு பிடித்திருப்பர். அதை அடுத்த ஆண்டிலேயே ஜப்பான் பல ஆயிரக் கணக்கில் உற்பத்தி செய்வதையும், அமெரிக்கர்களுடன் போட்டியிட்டு உலக சந்தையில் அதைச் சில சமயம் அமெரிக்கர் விலைக்குப் பாதியினும் குறைவாக விற்பதையும் காண்கிறோம். இந்தக் "காப்பி" யடிக்கும் முறை நமக்கு உதவும்; அவ்வப்போது நம் சொந்த முயற்சியையும் தூண்டுதல் நன்மையே.

தொழில்வளம் தேய்ந்த சென்னையில் ஒருசிறு சோதனை—முயற்சி செய்யலாம். பொறுக்கப்பட்ட 100 சிறு தொழில்கள், ஒவ்வொன்றும் சராசரி 50 தொழிலாளர்களையும் இரண்டு லட்ச ரூபாய் முதலீட்டையும் கொண்டு நடைபெறும் அளவுக்குத்திட்டமிடுவோம். இதில் பொதுமக்கள் பாதி முதலீடு இடுவதாகவும் அரசியலார்பாதி அளிப்பதாகவும் கொள்வோம். எனவே அரசியலார் முதலீட்டைப்பொறுத்த அளவில் இது சுமார் ஒருகோடி ரூபாய் திட்டம். இந்த திட்டத்தினை எவ்வாறு வளர்க்கலாம் என்று சிந்திக்கலாம். சிறு தொழில்கள் செழிப்பதற்கு வேண்டிய சாதானங்கள் வருமாறு. 1. நீடித்து நிலைக்கும் விற்பனை;

2. மிகக்குறைந்த விலையில் மூலப்பொருள்கள் பெறுவதற்குரிய வழிகள்;

3. தொழில் நடத்தும் முறையில் தேர்ச்சி;

4. தொழிற் பாதுகாப்பு.

5. தொழில்கள் வளர்த்துடனும், வளர்ச்சியுடனும் நீடிக்க நல்ல சந்தை வேண்டும். தேவை இல்லையேல் உற்பத்திக்கு இடமே இல்லை. இந்தத் தேவை தானாக அமைவது ஒரு சில தொழில்களுக்குத்தான். மற்ற தொழில்களுக்கு இந்தச் செல்வாக்கு ஆரம்பத்திலிருந்து உடன் வளர்க்கவேண்டியதாக இருக்கும். பொதுவாக மக்களின் வாழ்க்கைத்தரத்தை இரண்டாகக் கூறலாம்.

ஒன்று உடலில் உயிர்நிலைத்து வாழ்வதற்கான தேவை மட்டும். இரண்டாவதோ உலகத்தோடு ஒட்ட வாழும் நாகரிக வாழ்வு. உண்பது—உடுப்பதுடன் படிப்பதும், பழகுவதும். ஆதிக்குடிகள்போல உண்பதுடனும் உடுப்பதுடனும் நாம் திருப்தி அடைந்து விடுவதானாலும்கூட, மக்கள் தொகை பெருகிவரும் இந்நாளில் எல்லாம்நிறைந்தஅளவில்வேண்டியுள்ளது. சிறு விவசாயக்கருவிகள் உற்பத்திச்சாலை, உர உற்பத்திச்சாலை, நீர் இறைக்கும் கருவிகள் உற்பத்திச் சாலை, உடைக்கான பொருள்கள உற்பத்திச்சாலை, செருப்புத் தொழில் இவையெல்லாம் தேவையே. இருக்க இடம் வேண்டாமா? வீடுகள் கட்ட உதவும் பொருள்கள்—ஆணிகள், கீல்கள் பூட்டுகள், மரச் சட்டங்கள் முதலியவற்றை உண்டாக்கும் தொழில்கள் ஆகும். ஆனால், மக்கள் இத்துடன் அமைதியடைந்து விட

வில்லையே! உலகத்தோடு ஒட்ட ஒழுகும் முறையினை எடுத்துக் கூறிய தமிழ் மக்கள் வாளா இருப்பார்களா?

உலகநிலைக்கு உயர் கல்வி தேவை. அதற்கேற்ற சாதனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், நூல்கள், புகைப்படங்கள், திரைப்படங்கள், சோதனைக் கருவிகள் அனைத்தும் வேண்டும். உந்து வண்டிகள், புகை வண்டிகள், விமானம், தட்டெழுத்துப்பொறி; அச்சுப்பொறி, கப்பல் ஆகிய இவை நம் வாழ்க்கையின் போக்கை அடியோடு மாற்றிவிட்டனவே. குழந்தைகளுக்கு விதவிதமான விளையாட்டுக் கருவிகள் இன்று எங்கும் காண்கிறோம். நம் வாழ்க்கையை உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கு மாற்ற இன்றும் எத்தனையோ சாதனங்கள். தேவைகளையும், பண்பும் அமைந்திருந்தால்தான் உண்மையில் வாழ்க்கைத்தரம் உயர முடியும்.

உணவுப் பொருள்களை நிறைந்த அளவில் விளைவிக்க நமக்கு உரம் தேவை. மழையை நம்பி வாழும் நமக்கு பதப்படுத்திய உணவுகள் மிகவும் பயன்படும். இந்த உணவுகளை நாம் இன்றும் அதிகமாக உண்ணப் பழகிக் கொள்ளவேண்டும். வான் பொய்க்கும் நாளில் உணவு வேண்டின், வான்பொழியும் நாளிலே விளைவித்துக் கொள்ளவேண்டும். விவசாயத்திற்கு நல்ல கருவிகள் செய்து தரும் தொழிற்சாலைகள் வேண்டும். மாமிசம், முட்டை முதலியனவற்றை நிறைந்த அளவில் உற்பத்தி செய்து பதப்படுத்தும் தொழிற்சாலைகள் வேண்டும். வளரும் நிலையில் உள்ள தேவைகளை மக்கள் உணர்ந்து அவற்றைப் பெற முயற்சி செய்யும் நாளில், சிறு தொழில்களுக்குச் சந்தை தானாகவே ஏற்படுகிறது. முன்னரே ஏற்பட்டுள்ள மார்க்கெட்டுகளையுடைய சிறு தொழில்களை வளர்ப்பது ஒன்று; புதுத்தொழில்களுக்கு "மார்க்கெட்" ஏற்படுத்துவது ஒன்று. ஆக இருவகை சந்தைப்பணிகள் உள்ளன. இவை இரண்டும்தான் சிறு தொழில்களின் துவக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை. மார்க்கெட் இன்றித் தொழில் துவங்குதல் ஆபத்தாக முடியும். இரண்டு கோடி முதலீட்டில் நூறு தொழில்கள் துவங்கச் சிறுதொழில்கள் வளத்திற்கென நிர்ணயிக்கப் பட்டுள்ள விகிதப்படி, மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களை ஆண்டுதோறும் விற்றுத் தரும் 'மார்க்கெட்' வேண்டும். இது எளிதான செயலன்று; ஆயினும் முயன்றால் முடியாதது அன்று. மறைந்துள்ள இந்த மார்க்கெட்டை வெளிப்படுத்தினால்தான் வளம் நிலைக்கும். இதைவிடுத்து முதலீடுமட்டும் இட்டு, அதற்கேற்ப விற்பனைக்கு வழிசெய்யவேண்டியிருக்க, ஒரு வழியும் இல்லாத அளவில் தொழில்கள் சிதையும் நிலைக்கு வந்தால் அதன் அடிப்படையே குறைவு இருக்கிறதென்பது தெளிவு. ஒருசில தொழில்களுக்கு இந்த மார்க்கெட் இப்பொழுதே உள்ளது.

(கலைக்கதிர் இதழிலிருந்து எடுக்கப்பட்டது)

தென்னாட்டில் கயிறு தொழில்

தஞ்சை மாவட்டம் புஷ்ப வனத்திலும், கோவை மாவட்டம் ஊத்துக் குளியிலும் இரு கயறு தொழில் கூட்டுறவு சொசைட்டிகளை ஏற்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் அனுமதித்துள்ளது. இந்தத்திட்டத்துக்கு யந்திரங்கள் கட்டிடங்கள் ஆகிய மூலதனச் செலவு வகையில் ரூ 22,520ம், மூன்று மாத கச்சா பொருள் தேவை. சம்பளம் முதலிய நடை முதல் செலவு வகையில் ரூ. 21,450 நடை முதல் மூலதனமும் தேவைப்படும். இந்த ஒவ்வொரு சொசைட்டியும் ஒரு கூட்டுறவு சீனியர் இன்ஸ்பெக்டரை நியமித்துக் கொள்ள அனுமதிக்கப்படும். அவர்களுக்கான செலவை மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

நகரப் பகுதிகளில் இடங்காகவும் விற்பனைக் கடையாகவும் பயன்படக்கூடிய 7 டிபோக்களை ஏற்படுத்தவும் அரசாங்கம் அனுமதித்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் மல்லிப்பட்டணம் முத்துப் பேட்டையிலும், தென்னாற்காடு மாவட்டம் கடலூரிலும், ராமனதபுரம் மாவட்டம் சிங்கம்புணரியுலும், செங்கல்பட்டு மாவட்டம் சதுரங்கப்பட்டிணத்திலும் ஏற்கனவே உள்ள 5 கயறு கூட்டுறவு சொசைட்டிகளுக்காகவும் தஞ்சை மாவட்டம் புஷப வனம், கோவை மாவட்டம் ஊத்துக்குளி ஆகியவைகளில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சொசைட்டிகளுக்காகவும் இந்த டிபோக்களை ஏற்படுத்தப்படும். பக்கத்து ஊர்களிலிருந்து விற்பனைக்காக சந்தைக்குக் கொண்டுவரப்பட்டு ஆனால், விற்கப்படாமல் நிற்கும் கூட்டுறவு சொசைட்டிப் பொருள்களை இருப்பு வைக்க வகை செய்வதே இந்த டிபோக்களை ஏற்படுத்துவதின் நோக்கமாகும். இந்தத் திட்டத்துக்கு, ஒவ்வொரு டிபோவுக்கும் மேசை நாற்காலி முதலிய சாமான்கள் வகையில் முதலீட்டுச் செலவு ரூ. 226ம் வாடகை, ஊழியர் செலவு முதலிய வகையில் நடைமுதல் செலவு விஷயமாக ஆண்டுக்கு ரூ. 2,400 நடை முதல் மூலதனமும் தேவைப்படும். ஒவ்வொரு கூட்டுறவு கயறு சொசைட்டிக்கும், சொந்த விற்பனை இடங்கு டிபோவை தொடங்க 1959-60ல் ரூ. 2226 உதவி வழங்க அரசாங்கம் அனுமதித்துள்ளது.

பெர்லின் தேர்தல்

மேற்கு பெர்லினில் ஜுலை 1ம் தேதி பெடரல் ஜெர்மன் ஜனதிபதி தேர்தலை நடத்துவதை ஆட்சேபிக்கும் சோவியத் நடவடிக்கையானது, ஜெர்மன் பெடரல் குடியரசின் உள்நாட்டு விவகாரங்களில் மேலும் (சோவியத்) வலையிடும் முயற்சியாகும் என்று வெளிநாட்டு இலாகா இன்று கூறியது.

மேற்கு பெர்லினில் தேர்தல் குழாம் கூடுவதை ஆட்சேபித்து சோவியத் குறிப்பு ஒன்று பான் (மேற்கு ஜெர்மன்) சர்க்காரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதாக பெடரல் ஜெர்மன் சர்க்கார் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பெடரல் ஜெர்மன் சர்க்கார் இக்குறிப்பு விஷயமாக தமது நேசநாடுகளுடன் தொடர்புகொண்டிருப்பதாகவும் இதே மாதிரி குறிப்புகளை ரஷ்யா மாஸ்கோவிலுள்ள நேசஸ்தாலகலையங்களிடம் கொடுத்து வருகிறதாகவும் இந்த அதிகாரி பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

சோவியத் ஆட்சேபனை குறிப்பு பற்றி கருத்து தெரிவிக்கையில், வெளிநாட்டு இலாகா அதிகாரி ஒருவர்கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார்.

"மேற்கு பெர்லினில் ஜனதிபதி தேர்தலை நடத்துவது என்ற சாதாரணமான ஜெர்மன் முடிவுக்கு, ரஷ்யர் ஒரு உள் நோக்குடன் செய்திருக்கும் ஆட்சேபனையினால், இலாகா வியப்படைந்திருக்கிறது.

"தேர்தல் நடத்தும் முடிவானது 1954 ஜுலையில் பெர்லினில் ஜனதிபதி தேர்தல்களுடன் ஆரம்பமான சம்பிரதாய வழக்கத்தின் தொடர்ச்சியேயாகும். அத்துடன் அந்த வழக்கத்தைத் தொடர்ந்து அந்த ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும், அந்த நகரில் ஜெர்மன் சட்டசபையின் சாதாரண கூட்டங்கள் நடந்து வருவதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

ஐக்கிய ஜெர்மனி ஒன்றின் தலைநகரமாக வருவதற்கு, முக்கிய நேசவல்லரசுகளின் பொறுப்பில் விடப்பட்ட பெர்லின் நகரின் விசேஷ அந்தஸ்தை மதிக்கும் உடன்பாடுகளுக்கு இது அனுசரணையான தேயாகும்.

ரஷ்யா இதுவரை இந்த விஷயங்களை ஒன்றும் கவனித்தில் கொண்டதாகத்

தெரியவில்லை. மேற்கு வல்லரசுகள் செய்ததைப்போல் வழக்கமான பார்லிமெண்டரி நடவடிக்கையின் ஒருபாகமாக அங்கீகரித்திருக்கக் கூடும். வரப்போகும் ஜனாதிபதி தேர்தல் பெர்லினில் நடைபெறும் என்றும் ஜெர்மன் சட்டசபையின் தலைவர் டாக்டர் கெர்ஸ்டீன் மீர் 1958 அக்டோபரில் இதுபற்றி சம்பிரதாயமாக ஒரு அறிக்கை விடுத்தார் என்றும் எல்லோரும் அறிந்த விஷயமே.

தேர்தல் கூட்டம் ஜனநாயக முறையை விருத்திசெய்யும் சமாதான பூர்வமான கூட்டமாகும். இந்த கூட்டத்தின் தேதியும் சர்வதேசமகாநாடுகளும் முரண்படாமல் இருப்பதற்காக பெடரல் ஜெர்மன் அதிகாரிகள் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டனர். என்பதும் தெளிவாகும்.

"ஜெர்மன் பெடரல் குடியரசின் உள்நாட்டு விவகாரங்களில் மேற்கொண்டு தலையிட முயற்சி" என்றுதான் இதைக் கொள்ளவேண்டும்.

பீளமேடு திருவள்ளுவர் வாசகசாலை ஆண்டு விழா

பீளமேடு திருவள்ளுவர் வாசகசாலையின் முதலாவது ஆண்டு விழா, வாசகசாலை கட்டிடத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பீளமேடு பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. பி. கே. தாமோதரசாமி அவர்கள் தலைமை வகித்தார். திரு. சின்னப்பன் ஆண்டு அறிக்கையை வாசித்தார்.

கோவை நகராட்சி உதவி தலைவர் திரு. சு. ஆறுமுகம், ஆசிரியர் சுப்ரமணியம் வையாபுரி உடையார். ரங்கசாமி மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

செயலாளர் திரு. வெங்கடாசலம் நன்றி கூறிய பின்பு கூட்டம் இனிது முடிவுற்றது.

ரயில்வே ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு உடை.

நாடெங்கிலும் உள்ள ரயில்வே ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் படிக்கும் மாணவ மாணவியர் எல்லார் விஷயத்திலும் 1959 ஜூலையில் ஆரம்பமாகிற அடுத்த படிப்பு வருஷம் முதற்கொண்டு கட்டாயமாய் பள்ளிக்கூட "யூனிபாரம்" உடை அணியவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த "யூனிபாரம்" உடைகள் அதிகச் செலவு இல்லாத முறையில் சுலப அமைப்புள்ளதாக சாதாரணமாய் இருக்க வேண்டுமென்று ரயில்வே போர்டு உத்தரவிட்டிருக்கிறது.

மீன் பிடிப்புத் தொழில்

இந்தியாவில் உள்நாட்டு மீன் வகைகளும், கடல் மீன் வகைகளும் ஏராளமாக உள்ளன. இந்த விஸ்தாரமான ஆதாரங்களைத் திட்டமிட்ட அடிப்படையில் அபிவிருத்தி செய்தால் நமது உணவு உற்பத்தி அளவிலுள்ள குறையையும் சரிக்கட்டலாம்; முக்கியமாய்த் தேவைப் படுகிற பாதுகாப்பு உணவம்சங்களையும் புரொட்டீனையும் பெற்றுவிடலாம்.

இப்போது, இந்தியாவனது கடல் ஆதாரங்களிலிருந்தும் உள் நாட்டு நீராதாரங்களிலும் வருஷத்துக்குப் பத்து லட்சம் டன்னுக்கும் சற்று அதிகமான மீனைப் பெற்று வருகிறது. உலகத்திலுள்ள மீன் வள நாடுகளில் இந்தியா எட்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது.

இந்தியாவில் உள்நாட்டு மீன்துறை ஆதாரங்களிலே விஸ்தாரமான அலவிலுள்ள நதிகள், ஏராளமான பாசனக் கால்வாய்கள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் குட்டைகள், ஏரிகள், சேற்றுக் குழிகள், உவர் நீர் ஏரிகள், விரிவான கழிமுகங்கள் ஆகியவை அடங்கியுள்ளன.

ஆற்று மீன் பிடிப்பைப் பாதுகாப்பதற்கான அவசியம் வரவர அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது; முட்டையிடும் மீன்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், கழிமுக மீன்துறைகளில் அதிகமாக மீன் பிடிக்கப்படுவதை அல்லது குறைவாக மீன் பிடிக்கப் படுவதைத் தவிர்ப்பதற்குமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீன் வளர்ப்புக்காகச் சதுப்பு நிலங்களை மீட்பதற்கான வேலை ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் முதலில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் அனேக இடங்களில் சாக்கடை நீர் பாயும் குளங்களில் மீன் உற்பத்தி இருந்து வருகிறது; மீன் வளர்ப்புக் குளங்களுக்கு உரமிடுவதற்கும் சாக்கடை நீர் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது.

மீனைப் பெருமளவில் வெற்றிகரமாக உற்பத்திசெய்வதற்கு, உயர்தரமான நல்ல மீன் குஞ்சுகள் வினியோகமாகும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது அத்தியாவசியவாகும்; நிலையானஜலாதாரங்களிலுள்ள பெரும்பாலான சேல் மீன்வகைகள் "பித்துத் தூரி ஹார்மோன்கள்" செலுத்தப்படுவதன் மூலம் இன விருத்தி செய்யப்

கோவை ஜில்லா குலாலர் சங்க ஆண்டு விழா

கோவை ஜில்லா குலாலர் முன்னேற்ற சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா, பீளமேடு தலைமைச் சங்கத்தின் முன்பாக விசேஷமாக அமைக்கப்பட்டிருந்த பந்தலில் ஆரம்பமாயிற்று. உள்ளூர் வெளியூர் களிலிருந்து குலாலர் சமூகத்தவர்களும், மற்ற பொதுமக்களும் பலர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். சங்கத்தலைவர் திரு. எஸ். ராமசாமி தலைமை வகித்தார். காரியதரிசி திரு.சின்னப்பன் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். கோவை திரு. சி. ஆர். மருதாசலம் சங்கக் கொடியேற்றி வைத்தார்.

ஆர். கிஸன் அவர்கள் பேசுகையில் குலாலர்கள் ஒற்றுமையாக இருந்து, தன்னைத் தானே சீர்படுத்திக் கொண்டு, மட்பாண்டத் தொழிலில் முன்னேற்றம் காண வேண்டுமென்று வற்புறுத்தினார். திரு. கே. பி. பழனிசாமி எம். எல். ஏ. பேசுகையில், குவாலர்கள் தனி ஒரு ஜாதியாக இல்லாமல் பொதுப் படையாக இருந்து தொழிலுக்கு வேண்டுவன பெற்று அபிவிருத்தி அடையவேண்டுமென்று குறிப்பிட்டார். கூட்டத்திற்கு வந்திருந்த வழக்கறிஞர் திரு. கனகசபாபதி பி. ஏ. பி. எல். ஜாதீய முறையில் சங்கங்கள் இருக்கக்கூடாது என்றார். சங்க காரியதரிசி சங்கம் ஆரம்பிக்கப்பட்டதின் நோக்கம்பற்றி விளக்கினார். மற்றும் திருவாளர்கள் லட்சுமணசாமி, குமாரசாமி சி. ஆர். மருதாசலம், நாராயணசாமி ஆகியோர் பேசினார்.

காரியதரிசி அவர்களால் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டு, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. நன்றி உரைக்குப் பிறகு கூட்டம் இனிது முடிவுற்றது.

படுகின்றன. இந்த முறையின் மூலம், அஸ்ஸாமிலும் ஒரிஸ்ஸாவிலும் வர்த்தக ரீதியில் ஏராளமான மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மீன்துறை அபிவிருத்திக்கான அவசியத்தை சமீப வருஷங்களில் மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் நன்கு உணர்ந்துவிட்டிருக்கின்றனர்; ஐந்தாண்டுத் திட்ட நடவடிக்கைகளின் கீழ் மீன்துறை அபிவிருத்திக்காக அனேக ஆராய்ச்சி அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றிவைக்கப்பட்டு வருகின்றன.

பட விமர்சனம்:

புதுமைப் பெண்

தயாரிப்பு: ஜெயலட்சுமி பிக்சர்ஸ்.

மூலக்கதை: எஸ். ஆர். தட்சிணாமூர்த்தி.

வசனம், பி. ஏ. குமார்.

டைரக்ஷன்: எம். திருவேங்கடம்

முக்கிய நடிகர்கள்: எஸ். எஸ். ராஜேந்திரன், டி. எஸ். பாலையா, மனோகர், வி. கே. ராமசாமி, எம். என். ராஜம்.

சிவானந்தம் நல்லவர்: நல்லவரை எப்போதுமே இந்த உலகம் வாழ்விடுவது கிடையாது. இதற்கு சிவானந்தம் மாறுபட்டவரல்ல; சூழ்ச்சிக்காரரான, சிவானந்தத்தின் மானேஜர், சூழ்ச்சி செய்து, சிவானந்தத்தின் சொத்துக்களை அபகரித்து விடுகிறான்; சிவானந்தத்தின் நிலைபரிதாபகரமாக முடிந்தது. வேறு வழியின்றி, தன்னுடைய குழந்தைகளான, மாணிக்கத்தையும், முத்துவையும் இரண்டு நண்பர்களிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறி விடுகிறார்.

படித்துப்பட்டம் பெறுகிறான் பாலு. அவனுக்கு ரஞ்சினியின் நட்பு கிடைக்கிறது. முத்து, ஒரு கூலிக்காரன்; அவனுக்கு வித்தியா என்ற புதுமைப்பெண்ணோடு நட்பு கிடைக்கிறது. ஆனால் அவள் பணக்காரியாக இருந்ததால், அவளை ஏற்றுக்கொள்ளமறுக்கிறான். இந்தக் கட்டத்தில் வித்தியா முத்துவை அடைய ஒரு விசித்திரவழியைப் பின்பற்றுகிறார்; அவளுக்கோ, முத்

துவின்மேல் உயிர்; முத்துவை அடைய வித்தியா ஏழை வேடம் கொள்கிருள்; வித்தியாவிற்கும், முத்துவுக்கும் திருமணம் நடைபெறுகிறது; இதன்பின் பலசிக்கல்களும், குழப்பங்களும் ஏற்படுகிறது. அனைவரும் ஒன்று சேர்கின்றனர். இதுதான் கதையின் சுருக்கம்.

கதாநாயகன் முத்துவாக எஸ். எஸ். ராஜேந்திரன்நடிக்கிருர்; நடிப்புப் பரவாயில்லை? எப்போதும்போல் நடிக்கிருர்; விசேஷமாக ஒன்றும் கூறுவதற்கில்லை; பாலையா கொடுத்தபாகத்தை வெகு நன்ருக நடித்துள்ளார்; அவர் நடிப்பு உச்சநிலையை அடைந்ததோடு, ஹாஸ்யமும் நன்கு கலந்திருக்கிறது. சொல்லப்போனல், புதுமைப்பெண்ணுக்கு, புதுமையான நடிப்போடு, புத்துயிர் கொடுக்கிறவர் பாலையா என்று கூறலாம். மனேகர் நடிப்பு சுமாராக இருக்கிறது. வி. கே ராமசாமி, ராஜசுலோசனு ஆகியோர்கள் நடிப்பு நன்கு அமைந்துள்ளது. எம். என். ராஜம் நடிப்பு வழக்கம்போல் நன்ருக இருக்கிறது. எஸ். வி. சுப்பையாவிற்குக் கொடுத்தபாகத்தை, குறைவின்றி நன்கு நடித்துள்ளார். எல்லோரும் நன்கு நடித்திருந்தபோதிலும், கதாநாயகனுக நடித்துள்ள எஸ். எஸ். ராஜேந்திரன், உணர்ச்சியோடு, நடித்திருந்தால் படம் ஓரளவுவெற்றிகண்டிருக்கும்.

காட்சி அமைப்பு நன்கு அமையவில்லை. கைத்தறி துணியின் சிறப்பு நன்கு வற்புறுத்தப்படுகிறது. வசனம் நன்கு அமையவில்லை. டைரக்ஷன் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்; புதுமைப் பெண்ணில் கொஞ்சமாவது புதுமை இருக்கவேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்ப்பார்களல்லவா? ஓரளவு புதுமை, புதுமைப்பெண்ணில் வலுக்கட்டாயமாகப் புகுத்தப் பட்டுள்ளது?

—சி. ஜெ. மார்த்தாண்டன்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

தயாரிப்பு: லலிதகலா பிலிம்ஸ்

டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்

கதை, வசனம்: அய்யாப் பிள்ளை.

முக்கிய நடிகர்கள்: பிரேம் நஸீர், ஓ. ஏ. கே. தேவர். ராஜகோபால். கருணாநிதி.

ஒரு தாய்; அப்பப்பா! அவள் வாழ்க்கையில் வீசிய புயலின் கோரத்தாண்டவத்தை என்னவென்று சொல்லுவது! அவளுக்கு இரண்டு சேய்கள்; ஒரு மகன் பிரிந்து விடுகிருன்; அவனைப் பற்றித் தகவல் ஒன்றும் தெரியவில்லை; சொந்த மகன்

எப்படி என் போஸ் என்கிறார் மாதுரிதேவி கொஞ்சும் சலங்கையில்!

பிரிந்தாலும், இன்னொருமகன், அந்தத்தாயின் வளர்ப்பு மகனாக வளருகிறான்; வாழ்ந்த குடும்பம் அது; அதை வறுமை வாட்ட ஆரம்பித்துவிட்டது. குடும்பப் பொறுப்புள்ள குடும்பத்தலைவனும், இவ்வுலகை விட்டுப்பிரிந்துவிட்டான்; குடும்பம், திணறியது: தினசரி வயிற்றைக்கழுவுவதே பெரிய பிரச்னையாகிவிட்டது. பிழைப்பை நாடி, வாடிய அக்குடும்பம் வெளியேறுகிறது.

வெளியேறியமகன், பெரிய பணக்காரனாகிவிட்டான்; செல்வத்தின் மடியில் புரண்டு உருண்ட அவனுக்கு சீரான வாழ்வு வாழத்தெரியவில்லை; அக்கிரமக்காரன், திமிர்பிடித்தவன்— ஆம் இவைகள் தான் உலகம் அவனுக்கு சூட்டியபட்டங்கள்.

மற்றவன் நேர்மை உள்ளம் படைத்தவன். ஏழையின் இதயத்தீபமாக இருந்து, அவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தான்; அவன் எழுப்பிய உரிமை குரல், ஏழைகளெல்லோரையும் தட்டி எழுப்பியது. சிங்கப்பூரில் தன் தந்தை காலமானபின் தங்கள் தந்தையின் மில்ஒன்று தமிழ்நாட்டில் இருப்பதாக அறிந்துஒரு பெண்ணும் அவள் சகோதரனும் வருகின்றனர். திட்டவட்டமாகத் தெரியவில்லாததால், மேல்நாட்டு



கொஞ்சி விளையாடலாமா! என்கிறார் பாலையா முத்துலக்ஷ்மியிடம் வாழவைத்த தெய்வத்தில்.

நடனக்காரர்கள் போல் நடிக்கின்றனர். அப்பெண்ணுக்கு முரடன் பால் காதல் ஏற்படுகிறது. அவனோ இன்னுமொருப்பெண்ணை நாடுகிறான். அப்பெண்ணோ இன்னொரு ஆணை நாடினாள்: இப்படியாக காதல், ஒன்றை விட்டு ஒன்றுக்குத்தாவிக் கொண்டே செல்லுகிறது, இதற்கிடையில் முதலாளி, தொழிலாளி தகராறு—கதாநாயகன் வில்லன் லடாய்;, கடைசியில் எல்லோரும் ஒன்று சேருகிறார்கள்.

கதாநாயகனாக நடித்திருக்கும் பிரேம் நசீர் நடிப்பு நன்றாக இல்லை. முன்னேற்றம் மிக, மிகத் தேவை.

ஓ. ஏ. கே. தேவர் நடிப்பு சுமாராக இருக்கிறது. குலதெய்வம் ராஜகோபாலும், கருணாநிதியும் நல்ல முறையில் நகைச்சுவை அளிக்கிறார்கள். ஈ.வி. சரோஜா நடிப்பு ஒரு படி முன்னேறி இருக்கிறது. இன்னும் முயற்சி எடுத்தால், தமிழ் நடிகையான அவர் முன்னுக்கு வர நல்ல வாய்ப்பு இருக்கிறது. இளமை, அழகு, துடி துடிப்பு ஆகியவைகளை ஒருங்கேப் பெற்றுள்ள ஈ. வி. சரோஜா, சீக்கிரம், சினிமா உலகத்தில், சிறந்த நடிகையாகி விடுவார், என்பது அவரது நடிப்பிலிருந்து தெரிய வருகிறது. கண்ணப்பா நடிப்பு சுமாராக இருக்கிறது. சி. எஸ். பாண்டியனின் கலைவாணர் வில்லுப்பாட்டு நன்றாக உள்ளது.

கதையில் புதுமை ஒன்றும் இல்லை; அய்யாப் பிள்ளையின் வசனம் சில இடங்களில் சுவையுள்ளதாக இருக்கிறது. நகைச் சுவையுள்ள வசனம்

அவரால் அமைக்க முடியும்என்பது இப்படத்தின் வசனத்திலிருந்து தெரிய வருகிறது. திருமுகத்தின் டைரக்ஷன் நன்கு அமைந்துள்ளது. படம் ஒரு முறை பார்க்கலாம்.

—"மாமல்லன்"

"இரண்டாவது மனைவி"!

மகேந்திரா புரொடக்ஷன் தயாரிக்கும் "இரண்டாவது மனைவி" யில் நடிக திலகம் சிவாஜி கணேசன் நடிக்கிறார்; அவரோடு பண்டரிபாய் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார்; ஆரம்ப வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

தொட்டிலை ஆட்டும் பெண்கள் உலகை ஆளமுடியும்!

"தொட்டிலை ஆட்டும் பெண்கள் உலகை ஆள முடியும்" என்று கூறிய உடன் ஆண்கள் சீறிவிழுவார்கள்; காரணம்? "என்றும் பெண்கள் அடுப்புத்தான் ஊதவேண்டும்; ஆண்களுக்குப் பெண்கள் என்றும் அடிமைகள்; ஆண்கள் நலனுக்காகத்தான் பெண்கள் படைக்கப்பட்டார்கள்" என்று கூறும் ஒருசாரார் சமுதாயத்தில் உண்டு.

அப்படி அல்ல; பெண்களும் நாட்டை ஆளமுடியும்; அவர்களுக்கும் திறமை உண்டு; தொட்டில் ஆட்டும் கை, நாட்டையும் ஆளமுடியும் என்ற நல்லகருத்தை அடிப்படையாகக்கொண்டு "நாடார் பிலிம்ஸ்" ஒருபடம் எடுத்துள்ளது; இந்தப்படம் தெலுங்கு படத்திலிருந்து 'டப்" செய்யப்பட்டது; தெலுங்கு படத்தில் ஜி, வரலட்சுமி, வித்யாவதி, ரேலங்கி,லட்சுமி ராஜ்யம்ஆகியவர்கள் நடித்துள்ளார்கள்; படப்பிடிப்பு முடிவடைந்தது; சீக்கிரம் வெளியிடப்படும் என்று தெரியவருகிறது.

தமிழ்நாட்டின் வீரன் ஒருவனின் வாழ்க்கையை சித்தரிக்கும் படம் ஒன்று தயாரிக்க "நாடார் பிலிம்ஸ்" துரிதமாக ஏற்பாடுசெய்து கொண்டிருக்கிறது; விறுவிறுப்பான பல கட்டங்கள் இடம் பெறும் என்றும் தெரிகிறது.

"நாடகமே உலகம்"!

"நாடகமே உலகம்" என்று பிரபல ஆசிரியர் ஷேக்ஸ்பியர் கூறினார். பராசக்தி பிலிம்ஸார் தயாரிக்கும் தமிழ் படத்திற்கு "நாடகமே உலகம்" என்ற பெயர் சூடப்பட்டுள்ளது. டி. ஆர். ராமச்சந்திரன் முக்கிய பாகம் எடுத்து நடிக்கிறார். எஸ். வரலட்சுமியும் நடிக்கிறார். இந்த படத்திற்கு டைரக்ஷன் ஏ. எல். ஸ்ரீநிவாசன் ஆகும்.

பானுமதியின் "கானல் நீர்"!

பானுமதி எப்போதுமே சோம்பேறித் தனமாக இருப்பது கிடையாது; தன்னுடைய பரணி ஸ்டுடியோவை ஏ. எல். ஸ்ரீநிவாசனுக்கு "லீஸ்" கொடுத்து விட்டார்; கொடுத்துவிட்டு படம் தயாரிப்பில் இறங்கிவிட்டார்; தமிழ் படம் ஒன்று

எடுத்துக்கொண்டிருக்கிறார்; அந்தப் படத்திற்கு "கானல் நீர்" என்று பெயர் வைத்துள்ளார்.

தமிழ்படத்தில் பிரான்ஸ் 'அழகி'!

பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த ஒரு அழகியப்பெண் தமிழ் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்; கண்ணைக்கவரும் கட்டழகு மங்கையாம் அவர், பூத்துக்குலுங்கும் பருவ எழிலோடு விலங்கும் அந்தப்பெண் பிரான்ஸ் தேசத்து, வாலிபன் ஒருவரோடு சேர்ந்து தமிழ் படத்தில் நடிப்பாராம், "செங் கோட்டைச் சிங்கம்" என்ற படத்தை எடுக்கிறாரே சின்னப் பத் தேவர், அவருடைய படத்தில் நடிக்கத்தான் மேற் கூறிய அழகி ஒப்புக்கொண்டிருக்கிறார்.

மனிதர்கள் புகமுடியாத, பெரிய பெரிய காடுகள், படம் பிடிக்கப்படுகின்றன; காட்டுக்குள் புகுந்து நடிக்கவேண்டிய கட்டங்கள் பல, அந்தபடத்தில் வருகின்றன. காட்டில், புகுந்து நடிப்பதற்கு நல்ல உடல் உறுதி அவசியம், நடிக்க ஒப்புக்கொண்ட அந்த பிரெஞ்சுப் பெண் அழகோடு, நல்லஉடல் பலமும் பெற்றவர். இவர்களைத் தவிற, வங்காளத்தைச்சேர்ந்த வாட்ட சட்டமான ஒருவரும், படத்தில் நடிக்கத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்; 3 யானைகள் இதற்காக, பிரத்யேகமாகப் பயிற்சிக்கப்படுகின்றன, இந்த படத்தில் நடிக்கும், நடிக, நடிகைகள் எல்லோரும், திரை உலகத்திற்குபுதியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உல்லாச புரியில் எம். என். ராஜம்!

உல்லாசபுரியில் எம். என். ராஜம் என்ற உடன்; எங்கே? என்று கேட்கப்போகிறீர்கள்; வேறு எங்கும் இல்லை, உதக மண்டலத்தில்தான்; குளுகுளு ஊட்டியில், மாட்டுவண்டியில் பிரயாணம் செய்கிறார் எம். என். ராஜம்; மகிழ்ச்சி கட்டுக் கடங்காமல் கரைபுரண்டோடுகிறது; ஒருவர் மட்டும் மகிழ்ச்சியை முழு அளவு அனுபவிக்க முடியாது: பக்கத்தில் தோழிகள் வேண்டுமல்லவா? தோழிகள் பாட, எம். என். ராஜம், பாட்டின், இனிமையில் மெய்மறந்து போய் விடுகிறார். ஜுபிடர் தயாரிக்கும் "எல்லோரும் இந்நாட்டு மக்கள்" என்ற படப்பிடிப்பில் இந்தக்கட்டம் ஊட்டியில் படம் பிடிக்கப்பட்டது.

இந்தியாவிலேயே தமிழ்ப்படத்தின் தரம் உயர்வானது!

இந்தியாவில் எத்தனையோ, மொழிகளில் சினிமா படங்கள் எடுக்கப்படுகின்றன. உயர்ந்த நோக்கு, பண்பாடு, எல்லாம் ஒழுங்கே அமையப்பெற்றவை தமிழ் படங்கள்தான், என்று பிரபல ஆந்திரா நடிகை மாலினி கூறுகிறார் "நடிகை மாலினி, சபாஷ் மீனுவில் நடித்துள்ளார், "சபாஷ் மீனு" மூலம், திரை உலகில், அவருடையப்புகழை நிலைநாட்டி விட்டார்.

ஜப்பான், ஹாங்காங் முதலிய அன்னிய நாடுகளுக்கு செல்லும் பிரபல சினிமா பட தொழிலதிபர் ஏ. வி. மெய்யப்பரும், அவரது துணைவியாரும், கல்கத்தாவுக்கு பயணமானபோது, விமான நிலையத்தில் ஏராளமான நண்பர்கள், அவர்களை வழியனுப்பிய போது எடுத்த படமிது.

ஆந்திராவில் பிறந்தாலும், மாலினி தமிழ் நன்கு பேசக் கூடிய ஆற்றல்பெற்றவர்: தமிழர்களிடம் அவருக்கு ஒரு அலாதிப்பிரியம் உண்டு; "விரும்பத்தகாத" பாகம் எடுத்து நடிக்கவேண்டுமென்ருல் எனக்கு அச்சமாக இருக்கிறது என்று அவர் கூறுகிருர்.

இந்தியப் படம் நியூயார்க்கில் திரையிடப்பட்டது.

வொர்ல்ட் தியேட்டர் என்னும் திரை அரங்கில் "ஒரு பிடி தான்யம்" என்னும் இந்தியத் திரைப்படம் முதன் முதல் காட்டப்பட்டது. இந்தியத் திரைப் படங்கள் பற்றிய ஆர்வம்

208367

அமெரிக்காவில் அதிகமாகியுள்ளது.

இது சென்ற ஆண்டில் அமெரிக்கத் திரைப்படக் கழகத்தின் வெளிநாட்டுத் திரைப் படப் பரிசுக்காக இந்திய அரசாங்கத்தால் தெரிந்தெடுக்கப் பட்ட படம். இந்தியாவில் முக்கியமான நடிகை நர்கீஸ் இதில் நடித்திருக்கிறார்.

அதுவுமல்லாமல், இந்த வாரத்தில் நியூயார்க் டைம்ஸ் சத்யஜித் ராயைப்பற்றி மேற்கொண்டும் தகவல் கொடுக்கிறது, ராயின் மூன்று படங்களில் "பத்தர் பஞ்சேலி", "அபாரஜிதோ', என்னும் முதல் இரண்டும் அமெரிக்காவில் அவருக்குப் பெரும் புகழ் தேடிக்கொடுத்திருக்கின்றது.

ராய் "ராஜர் கதாமாலா" என்னும் புதிய படத்திற்கு வேலை தொடங்கி விட்டதாக டைம்ஸ் அறிவிக்கிறது. "அது புகழ் பெற்ற இந்தியக் கவியரசர் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய ஒரு கதையைத் தழுவிய நாடகம்; அது தன்னைக்கவர்ந்துள்ள ஒரு கதாநாயகியின் செயல்களைப் பின்பற்றும் ஒரு இளம் பெண்ணின் கதை" என்று அந்தப் பத்திரிகை அதனை வருணித்திருக்கிறது.

ராயின் மூன்று படங்களில் மூன்றாவதாகிய "அப்புவின் உலகம்" என்பது இந்தஆண்டு இறுதியில் அமெரிக்காவில் முதன்முதல் காட்டப்படும். என்று அதன் வினியோகஸ்தர் எட்வர்ட் ஹாரிஸன் சொல்வதாக பத்திரிகை அறிவிக்கிறது.

—*—

கிராமபோன் தட்டுகள்

கிராமபோன் இசைத் தட்டுகள் (ரிக்கார்டு) தயாரிப்பது விஷயத்தில் அதில் பதியப்படும் பாட்டு, வசனம், நாடகம் முதலிய எந்த விஷயம் சம்பந்தமாகவும் யாருக்குக் காப்பிரைட் உரிமை அளிக்கிறதோ அவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய ராயல்ட்டி விகிதத்தைக் காப்பிரைட் போர்ட் 1957-ம் வருஷத்திய காப்பிரைட் சட்டப்படி நிர்ணயித்து அறிவித்திருக்கிறது. அந்த விகிதம் இசைத் தட்டின் சாதாரண சில்லறை விற்பனை விலையில் 5% ஆக இருக்கவேண்டும். சில்லறை விற்பனை விலை என்னவென்றால், பொது ஜனங்களுக்கு இசைத்தட்டை விற்பதற்குக் கொடுக்கவேண்டியதால் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது பட்டியலில் கண்டுள்ள விலையாகும். அவ்வாறு குறிப்பிடப்படாவிட்டால் சாதாரணமாய் பொது விற்பனைக்கு வாங்கப்படுகிற உச்ச விலையாக அது கணக்கிடப்படும்.

Edited & Published by K. Perumal Udayar,
EdapalayamStreet, Madras-3. Asst. Editor: C. J. MarthandamB.A.
Printed by K. N. Thiruvengadam,
at his Ananda Parvathi Press, 30, Edapalayam St., Madras-3.

கோபி பிரதர்ஸ்
அளிக்கும்
ஓடாதே! நில்!
வசனம் :
சிவ - சுந்தரம்
(கோபி சகோதரர்கள்)
கதை · டைரக்ஷன் :
S. பாலசந்தர்

Regd. No. M. 7007. THOZHIL 15-7-59

மாணவர்கள் தேவை

'B' குருப் வகுப்புகள் ஆரம்பதேதி: 25-7-59.

தமிழ் அறிவுபெற்ற ஆண்-பெண் இருபாலரும் பள்ளியில் இடையே படிப்பை நிறுத்தியவர்களும், S. S. L. C. தேர்வில் தேறியவர்களும், தவறியவர்களும் கீழ்க்கண்ட 59-60ம் வருட சர்க்கார் தேர்வுகளுக்கு மாதம் மும்முறை தபால் மூலம் பாடங்கள் பெற்று இலவசமாக பயிற்சி பெறும் மாணவர்கள் தேவை. தேர்வின் வெற்றிக்கும், பாடங்கள் அனுப்பிப் பயிற்சியளிப்பதற்கும் உறுதிப் பத்திரம் வழங்குகிறோம். மாணவர்களின் கஷ்ட-நஷ்டங்களுக்கு அப்பத்திரம் பொறுப்பேற்றுக்கொள்கிறது.

(1) உத்கல்; B. A.; (2) P. Com.; (3) I. Com.; (4) Inter; (5) Madras Metriculation; (6) Pre-University; (7) தமிழ் வித்வான் வகுப்புகள்; (8) சர்வீஸ் கமிஷன்; (9) (S. S. L. C. (Oct. 59 & March 60); (10) E. S. L. C. (11) கைத்தறி நெசவு; (12) விவசாயம்; (13) Accountancy; (14) Overseer; (15) Postal-clerk; (16) Postman; (17) கிராமமணியம் & கர்ணம்; (18) ஹிந்தி வகுப்புகள் (பிப்ரவரி [illegible] க்குக் (19) ஹோமியோபதி (தமிழ் & ஆங்கிலம்); (20) கிராம [illegible]ம்; (21) பேஸிக் ஆங்கிலம்.

1949-ம் ஆண்டு முதல் சொந்த அச்சகத்துடன் பல கிளை நிலயங்கள் நிறுவி ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு இலவசக் கல்வி பயிற்சியளித்து வருகிறது நமது கல்வி ஸ்தாபனம். ஆகவே 25-7-59 முதல் ஆரம்பமாகும் நமது B-குருப் வகுப்புகளின் முழு விபரங்களுக்கு 15 n. p. ஸ்டாம்புடன் விண்ணப்பித்து நமது வகுப்புகளில் சேர்ந்து பயிற்சிபெற்று பயன் அடையவும்.

தமிழ் நாட்டின் தனிப்பெறும் தபால் இலவசக் கல்வி ஸ்தாபனம்!

பாரதமாதா ஹிந்தி வித்யாலயம்
ரிஷிவந்தியம் S.O. தென் ஆற்காடு Dt.
கிளைகள்: சென்னை, மலேயா, சிலோன் & தென்னாப்ரிகா.

Wrapper printed at Sampath Press, Sowcarpet, Madras.1.